இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில்: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us
# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 16 சோபகிருது வருடம், ஆனி மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை
(13.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 24, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT the HEAT The Reliable Fan
1st July to 31st July 2023
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# காணிகளை சுவீகரிக்காதே!

## மண்டைதீவில் திரண்ட மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



யாழ். செய்தியாளர்

யாழ்ப்பாணம், மண்டைதீவு பகுதியில் கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிராக பொதுமக்களும் அரசியல் பிரதிநிதிகளும் நேற்று (12) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் ஜே-07 கிராம சேவகர் பிரிவில் உள்ள 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணியை வெலிசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில் நேற்றைய தினம் அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் ஆகியோர் மண்டைதீவு கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு... 02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



முஸ்லிம் மக்களின் மனங்களை வெல்ல திட்டம் போட்டுட்டார் ரணில் ஐயா.. என்னங்கோ

## இம்மாதம் முதல் அஸ்வெசும கொடுப்பனவு

02பக்கம்

### தொழிலாளர் பணிப்பகிஷ்கரிப்பு

## இறம்பொடையில் நேற்று களேபரம்

### விசேட அதிரடிப்படையின் பிரசன்னத்தால் பதற்ற நிலை

இறம்பொடை செய்தியாளர்

நுவரெலியா, இறம்பொடை ஆர்.பி. தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு நிர்வாகத்தினால் இழைக்கப்பட்டு வரும் அநீதிக்கு எதிராக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் நேற்று (12) இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. இதனையடுத்து தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

அந்தத் தோட்டத்துக்கு நேற்று திடீரென பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டதையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

இறம்பொடை ஆர்.பி. டிவிசனிலுள்ள பெருந்தோட்ட... 02 பக்கம்

## தமிழர்கள் பிரச்சினை தொடர்பில் பாரதப் பிரதமர் மோடிக்கு கடிதம்

### உயர்ஸ்தானிகரிடம் இன்று கையளிக்க தமிழ்க் கட்சிகள் ஏற்பாடு



யாழ். செய்தியாளர்

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காக தயாரித்த கடிதத்தில் சில கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்ட நிலையில் கடிதம் இன்று (12) இந்திய உயர்ஸ்தானிகர்.. 02 பக்கம்

### 03 வைத்தியசாலைகளில்

## மின்கட்டண நிலுவை ரூ.08 கோடி

கே. சுபானி

இரத்தினபுரி போதனா வைத்தியசாலை, எம்பிலிப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலை மற்றும் தெலிகம மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில்... 02 பக்கம்

## 300 பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடு நீக்கம்

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் 300 பொருட்கள் மீதான கட்டுப்பாடுகளை அடுத்த வாரம் முதல் தளர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று (12) தெரிவித்துள்ளார்.

மின்னணு உபகரணங்கள் உள்ளிட்ட 300 பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை கடந்த ஜூன் மாதம் 09 ஆம் திகதி முதல் தளர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் பின்னர் மேலும் 300 பொருட்களுக்கான கட்டுப்பாடுகள் அடுத்தவாரம் முதல் தளர்த்தப்படவுள்ளன.

இதேவேளை, வாகனங்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய பொருளாதார நிலைமையில் வாகன இறக்குமதியை அனுமதிக்க முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### பஸ்களை கண்காணிக்க

## 04 விசேட குழுக்கள்

நாட்டில் அனுமதிப்பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்கள் தொடர்பில் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, அதற்கென நான்கு விசேட குழுக்களை நியமித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. 02 பக்கம்



உஷ்

பொலிஸ் மா அதிபர் பதவியில் நீடிக்க சி.டி.விக்ரமரத்னவுக்கு மேலும் 3 மாத காலம் ஜனாதிபதி ரணில் அனுமதியளித்தது தெரிந்த விடயமல்லவா?

அந்த 3 மாதங்களின் பின்னர் மேலும் சில மாதங்களுக்கு சேவை நீடிப்பை அவருக்கு வழங்க ரணில் திட்டம் கொண்டுள்ளாராம். பொலிஸ் மா அதிபர் பதவியில் அரசியல் பின்னணி கொண்டவர்களை நியமிக்கமாட்டேன் என்கிறாராம் ஜனாதிபதி.

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவு



### புள்ளிகளின் அடிப்படையில் சிறிசற்குணராஜா முன்னிலையில்

யாழ். செய்தியாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த நான்கு பேரில், திறமைப் புள்ளி அடிப்படையில் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஷ்ட பேராசிரியர் ரி. வேல்நம்பி,... 02 பக்கம்

## மகனை அழைத்துவர அனுமதிக்க வேண்டும்

### சாந்தனின் தாயார் உருக்கமான ஜனாதிபதியிடம் வேண்டுகோள்



கே. சுபானி

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்து பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ள சாந்தனை நாட்டுக்கு அழைத்துவருவதற்கு அனுமதியளிக்க வேண்டும் என தெரிவித்து... 02 பக்கம்

## பொலிஸ்மா அதிபரின் நியமனம் சட்டவிரோதம்

### உதய கம்மன்பில எம்.பி. குற்றச்சாட்டு



பொலிஸ்மா அதிபராக சி.டி. விக்கிரமரத்னவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நியமித்துள்ளமை சட்டவிரோதமானதென பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குற்றஞ்சுமத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று (12) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியலமைப்பின் பிரகாரம் பொலிஸ்மா அதிபர்... 02 பக்கம்

## சுவீடனில் புனித குர்ஆன் எரிப்புக்கு ரணில் கண்டனம்

### அமைதியின்மைக்கு இடமளிக்க வேண்டாம் என மேற்கத்தேய நாடுகளிடம் கோரிக்கை



சுவீடனில் புனித அல்குர்ஆன் எரிக்கப்பட்டதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் அமைதியின்மைக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் தெற்கின் பூகோள விழுமியங்களுக்கு மதிப்பளிக்குமாறும் மேற்கத்தேய நாடுகளைக் கேட்டுக் கொண்டார். இரத்தினபுரி புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நேற்று முன்தினம்(11) பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். 02 பக்கம்

### அரச மானியம்பெறும்

## 1 வீதமான பணக்காரர்கள்

கே. சுபானி

நாட்டில் அதிக வருமானம் பெறுவோரில் 12 சதவீதமானோர் அரச மானியங்களை பெறுவதாக உலக வங்கியால் 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தை உரியமுறையில்... 02 பக்கம்

## தொழிலாளர்...

தொழிலாளர்கள் தமது தொழில்சார் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் தொழிலாளர்களுடன் தோட்ட நிர்வாகத்தினர் நேற்று மாலை கலந்துரையாடுவதற்கு வருகைதந்திருந்தனர். அந்த சந்திப்பு தோட்டத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

தமக்கான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன செலுத்தப்படாமல் இருப்பதால் அந்த விடயம் உட்பட தொழில் உரிமைகளை அவர்கள் கோரியிருந்தனர். அதற்குப் பதிலளித்த நிர்வாகத்தினர் அந்த செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

அதனை ஏற்றுக்கொள்ளாத தொழிலாளர்கள் அவ்வாறெனின் அதனை எழுத்துமூலமாக வழங்குமாறு குறிப்பிட்டனர். அதற்கு நிர்வாகத்திடமிருந்து பொருத்தமான பதில் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் தொழிலுக்கு வராவிட்டால், சுய விருப்பின்பேரில் தொழிலை விட்டு விலகியவராக கருதி, தோட்ட பதிவேட்டில் இருந்து பெயர் நீக்கப்படும் எனவும் தோட்ட லயன் அறைகள் மீள நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டு தொழிலாளர்களுக்கு நிர்வாகம் எனக் கூறப்படும் தரப்பால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அவ்வாறானதொரு கடிதம் தங்களுடைய நிர்வாகத்தினால் அனுப்பிவைக்கப்படவில்லையென நேற்றைய கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் விசேட அதிரடிப்படையினரின் வருகைக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் கூறப்பட்டது.

இந்நிலையில் இருதரப்பு பேச்சுவார்த்தை உடன்பாட்டுக்கு வராத நிலையில் தோல்வியில் முடிவடைந்தது. இதனையடுத்து தொழில் உரிமைக்காக தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு ஆர்.பி. தோட்டத் தொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

## இம்மாதம்...

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கொடுப்பனவுகள் இம்மாதம் முதல் உரிய முறையில் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை ஒன்பது இலட்சத்து 82 ஆயிரத்து 770 மேன்முறையீடுகளும் 62 ஆயிரத்து 368 ஆட்சேபனைகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்காத அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் பயனாளிகளுக்கு இம்மாதம் முதல் உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கூறினார். முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களின் கொடுப்பனவுகளில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## அரச மானியம் பெறும்...

நடைமுறைப்படுத்துவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி நலன்புரி அனுகூல சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவதன் மூலம் நலன்புரி உதவிகளைப் பெறுவோர் மற்றும் வழங்குவோர் பொறுப்புடன் செயற்படுவர். இருப்பினும், சில வேளைகளில் அரச அதிகாரிகள் அந்தப் பெறுப்பை ஏற்க மறுப்பதால் வேறொரு குழுவுக்கு வழங்கி மேற்படி தகவல்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது.

மத்திய வங்கியின் ஒழுங்குமுறையின் சமுர்த்தி வங்கி முறைமையை கொண்டுவர பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அஸ்வெசும வேலைத்திட்டம் எவ்வித உள்நோக்கமும் இல்லை. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுவது நலத்திட்ட உதவிகள் தேவைப்படுவோருக்கு வழங்குவதும் பின்னர் ஒருகாலத்தில் அவர்களுக்கு அவ் உதவித்தொகை தேவைப்படாது என கூறுமளவுக்கு அவர்களை வழிநடத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் அரசியல், இன, மத வேறுபாடின்றி நெருக்கடிக்குள் வாழும் இந்நாட்டின் பிஜைகளுக்கு உதவிகள் வழங்குவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அஸ்வெசும வேலைத்திட்டம் குறித்தான முறைபாடுகளை ஏற்கும் ஜூலை 10ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சுமார் 9 இலட்சத்து 60ஆயிரம் முறைப்பாடுகளும் எதிர்ப்புகளும் பதிவாகியுள்ளன.

பதிவாகியுள்ள முறைப்பாடுகளையும் எதிர்ப்புகள் குறித்து முழு கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், விரையில் இவ்வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் மக்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகைகள் மூலம் விரும்பிய இலக்கை எட்டியதா என்ற கேள்வியுள்ளது. உலக வங்கியால் நடத்தப்பட்ட 2019 கணக்கெடுப்பின் மூலம், அதிக வருமானம் பெறுவோரில் 12 சதவீதமானோர் சமுர்த்தி கொடுப்பனவுகளைப் பெறுவதாக தெரியவந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## மகனை...

அவரின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி, வடமாகாண ஆளுநர் பணிமனை ஊடாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் ஊடாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கு கோரிக்கை கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 31ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நளினி, ரவிச்சந்திரன், முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து உயர் நீதிமன்றம் 2022ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இதனையடுத்து விடுதலை செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த சாந்தன், முருகன் உள்ளிட்டோர் நாட்டுக்கு அனுப்பப்படாமல் திருச்சி சிறப்பு முகாமிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள சாந்தன், 32 ஆண்டுகளாக தனது தாயை பார்க்காததால் அவரை பார்க்க இலங்கை வர அனுமதி கோரி கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்தில், இலங்கை குடிமகனான நான் தற்போது திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளேன். 1991ஆம் ஆண்டிலிருந்து இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்பு படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தேன். கடந்த 11.11.2022 அன்று இந்திய உச்சநீதிமன்றம் நீண்டகால சிறைவாழ்க்கை, நன்னடத்தை போன்ற காரணிகளை முன்வைத்து விடுதலை செய்து உத்தரவிட்டது. அடுத்த நாளிலிருந்து திருச்சி மத்திய சிறைவளாகத்தில் இருக்கும் சிறப்பு முகாமில் தமிழ்நாடு மாநில காவல்துறையின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளேன். அம்மாவை கடந்த 32 வருடங்களாக பார்க்கவில்லை. அவருடைய இந்த முதுமையான காலத்தில் அவருடன் சேர்ந்து வாழ விரும்புகின்றேன். ஒரு மகனாக அவருக்கு உதவிக்கரமாக இருக்க ஆசைப்படுகிறேன். தயவுசெய்து நான் இலங்கைக்கு வர அனுமதியளிக்க உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு வேண்டுகிறேன் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது 75 வயதைக் கடந்த சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி, தனது மகனை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான போராட்டத்தில் இறங்கியுள்ளார்.

இதன் முதற்கட்டமாக வடமாகாண ஆளுநர் பணிமனை ஊடாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் ஊடாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி ஆகியோருக்கு தனது நாட்டுக்கு அழைத்துவர அனுமதிக்கக் கோரி கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

## தமிழர்கள்...

கோபால் பாக்லேவிடம் கையளிக்கப் படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இந்திய அரசாங்கம் தமிழர் தரப்பு விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி குறித்த கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நான்கு கட்சிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் நேற்று புதன்கிழமை கூடி குறித்த கடிதத்தில் கையொப்பமிட்டனர்.

கடிதத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனும் புளொட் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஜனநாயக போராளிகள் கட்சி சார்பில் வேந்தனும் கையொப்பமிட்டனர்.

மேலும், ரெலோவின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடமும், தமிழ்த் தேசிய கட்சி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தாவும் கையொப்பமிட்ட பின்னர் குறித்த கடிதம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது.

இந்தக் கடிதத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் பிரகாரம் கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தனியாக இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பவுள்ள நிலையில், தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்கனவே கடிதத்தை இந்திய துணைத்தூதுவர் ஊடாக இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 03 வைத்தியசாலைகளில்...

8 கோடியே 63 இலட்சத்து 6 ஆயிரத்து 412 ரூபா மின்கட்டணம் செலுத்தப்படாது நிலுவையிலுள்ளது.

இத்தொகையை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படாவிடின் குறித்த வைத்தியசாலைகளுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்படும் என தெரிவித்துள்ள இலங்கை மின்சார சபை, இதுதொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு தொலைநகல் மூலம் தகவல் அனுப்பியுள்ளது.

மேற்படி வைத்தியசாலைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. இரத்தினபுரி போதனா வைத்தியசாலை ஆரம்பமுதல் மத்திய மாகாண அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன் எம்பிலிப்பிட்டிய மற்றும் தெலிகம மாவட்ட வைத்தியசாலைகள் சப்ரகமுவ மாகாண அரசின் கட்டுப்பாட்டிலிருந்து பின்னர் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வைத்தியபீடம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இரத்தினபுரி பொது வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக மாற்றப்பட்டது.

இரத்தினபுரி பொது வைத்தியசாலைக்கு ஆறு மின்சார கணக்கிலக்கங்களின் கீழ் மின்சாரம் விநியோக்கிப்படுகின்ற நிலையில் குறித்த அந்த ஆறு இலக்கங்களுக்குரிய மின்கட்டணம் செலுத்தப்படவில்லை என தெரிவித்து மின்சார சபை சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குள் இரத்த வங்கியும் உள்ளடங்கும்.

அதன்படி இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் 6 கோடியே 67 இலட்சத்து 69 ஆயிரத்து 535 ரூபா பெறுமதியான மின்கட்டணம் செலுத்தப்படாது நிலுவையிலுள்ளது. இதேபோன்று எம்பிலிப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலைக்கான ஒரு கோடியே 90 இலட்சத்து 11 ஆயிரத்து 694 ரூபா பெறுமதியான மின்கட்டணமும், தெலிகம வைத்தியசாலையின் 5இலட்சத்து 25ஆயிரத்து 184 ரூபா பெறுமதியான மின் கட்டணமும் செலுத்தப்படாது நிலுவையிலுள்ளன.

மேற்படி நிலுவைத் தொகையை செலுத்துமாறு வைத்திய அதிகாரிகளுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தாலும் இதுவரை அத்தொகை செலுத்தப்படாதுள்ளது. எனினும், அந்த வைத்தியசாலைக்கான மின்தேவையை கருத்திற்கொண்டு இதுவரை மின்விநியோகம் துண்டிக்கப்படாதுள்ளது என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுவீடனில் புனித...





இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

மதத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பான முழு கருத்தியலும் தற்போது சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் சல்வான் மோமிகா என்பவர் சுவீடனில் உள்ள துருக்கி தூதரகம் முன்னால் குர்ஆனை எரிக்க அனுமதி கோரி நீதிமன்றத்தை நாடினார். பொலிஸார் அதற்கு அனுமதி மறுத்தாலும் அது கருத்து தெரிவிக்கும் உரிமை என்று உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது.

மதச் சுதந்திரத்தின் அடிப்படையிலே பொலிஸார் செயல்பட்டார்கள். அது கருத்து தெரிவிக்கும் உரிமை என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது. புனித குர்ஆன் எரிக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சுவீடனுக்கு அனைத்து நாடுகளாலும் அழுத்தம் விடுக்கப்பட்டது.

அனைவரும் கண்டனம் தெரிவித்தனர். இஸ்ரேல் கூட இதை செய்யப்படக்கூடாத ஒன்று என்று கூறியது. இது ஏபிரகாமின் கடவுள் பற்றிய புனித நூல் என்றும், இதை அவமதிக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

புனித குர்ஆனை எரிப்பது அருவருக்கத்தக்க மற்றும் அவமரியாதைக்குரிய மற்றும் தூண்டிவிடும் செயல் என்றும் சுவீடன் தெரிவித்துள்ளது. ஆனால், கருத்துச் சுதந்திரம், எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை ஆகியவை அரசியலமைப்பு சட்டத்திற்கு அமைய பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கூறியது.

இந்த பதிலைத் தொடர்ந்து ஒருசில மேற்கத்தேய அரசாங்கங்கள் இது கருத்துச் சுதந்திரம் என்று கூறின. அவ்வாறு இதனை கருத்துச் சுதந்திரத்தின் கீழ் கொண்டு வந்தனர். இதன் காரணமாக பாகிஸ்தான் தற்போது ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு சென்றுள்ளது.

இது சர்வதேச சட்டத்தை மீறும் செயலாகும் என பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு 13ஆம் திகதி வியாழக்கிழமை ஜெனீவாவில் இதுகுறித்து கவனம் செலுத்தப்பட உள்ளது. இப்போது எழும் கேள்வி இதுதான். இது மதச் சுதந்திரத்தை மீறுவதாக நாம் அனைவரும் கருதுகிறோம். ஆனால், இதை கருத்துச் சுதந்திரத்தின் கீழ் கொண்டுவர முயற்சி நடக்கிறது. எல்லாவற்றையும் கருத்துச் சுதந்திரத்தின் கீழ் கொண்டு வர முடியாது. அதற்கு ஒரு வரையறை இருக்கவேண்டும். இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது மேற்குலக நாடுகளுக்கு பின்னடைவாக அமையும் என சில அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் கூறுகின்றன. இது மேற்கு அல்லது கிழக்கு அல்லது வடக்கு அல்லது தெற்கு பிரச்சினை அல்ல. இது மதத்தைப் பின்பற்றும் உரிமை பற்றிய கேள்வியாகும்.

நான் முஹம்மது நபியைப் பின்பற்றுபவன் அல்ல. ஆனால், திருக்குர்ஆன் மிகவும் மதிப்புமிக்க நூல் என்று நான் நினைக்கிறேன். பகவத் கீதை மற்றும் பைபிளையும் நாம் அதேபோன்று பயன்படுத்தலாம். இதேபோன்று, தம்ம பதத்திலும் அல்லது திரிபிடகத்திலும் பயனுள்ள விடயங்களைக் கண்டறியும் பௌத்தர் அல்லாதவர்களும் இருக்கின்றனர்.

எனவே, நாம் அனைவரும் இதை மதத்தின் மீதான தாக்குதலாகக் கருதுகிறோம். ஆனால் ஒருசில மேற்கத்தேய நாடுகளின் கருத்துப்படி இது ஒரு கருத்துச் சுதந்திரமாகும். ஏனென்றால், அவர்கள் குழப்பத்தை மறைக்க கருத்துத் தெரிவிக்கும் எண்ணக்கருவை விரிவுபடுத்த முயற்சிக்கிறார்கள்.

அதனால் மேற்கத்தேய விழுமியங்களை பரப்புவதற்காக கருத்துச் சுதந்திரத்தை பயன்படுத்திக்கொள்கிறோம் என்பதே அவர்களது நிலைப்பாடாக உள்ளது. அதேபோல் அந்த விழுமியங்களை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஜனநாயகத்தை மதிப்பவர்கள். குறித்த விடயத்துடன் தொடர்புடையதாகவே மேற்படி விடயங்களை குறிப்பிடுகிறேன். இதன்போது இலங்கை தொடர்பில் நான் எதுவும் பேசப்போவதில்லை. ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் தொடர்பிலான விடயங்களை நாம் நிறைவேற்றவில்லை என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அதனால் எமது நிலைப்பாடு எதுவாக இருப்பினும் பொறுப்புகளை நிறைவேற்றிக்கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும். அதனால் ஐக்கிய நாடுகள் சபை ஏன் அமைதி காக்கிறது என்பதே எமது கேள்வியாகும். அந்த சபையினால் இதுகுறித்த அறிக்கையொன்று வெளியிடப்படாமல் இருப்பதன் நோக்கம் என்ன? எதற்காக வாக்கெடுப்பொன்று வரும்வரையில் காத்திருக்க வேண்டும்? இது அனைவருக்கும் முக்கியமான விடயம் என்ற வகையில் நாம் எவ்வாறான விழுமியங்களை பின்பற்ற வேண்டும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

எமது நீதிமன்றத்துக்கு அதிகாரம் மற்றும் இறைமை என்பன மக்களிடத்திலிருந்தே கிடைக்கின்றன. இருப்பினும் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் மனித உரிமைகள் தொடர்பிலான பிரேரணையை பின்பற்ற வேண்டும். அவ்வாறாயின் நாம் எவ்வாறான விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் தற்போதுவரையில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் அனைத்து நியதிகளையும் பின்பற்றியுள்ளோம். ஆனால், ஒரு பிரச்சினை உள்ளது. அனைத்து விடயங்களும் அவர்களுடைய நிலைப்பாட்டின் மீதே தங்கியுள்ளன.

உங்களுடைய கடைப்பிடித்தலுக்கான சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்த முடியாது. அதேபோல் அதற்கு வேறுவிதமாக அர்த்தம் கூறிக்கொண்டு கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் அதனை தடுக்கவும் முடியாது. ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியும் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியிருந்த நிலையிலேயே மனித உரிமைகள் பிரகடனம் கொண்டுவரப்பட்டது. அவரின் உரையில் இரண்டாவது விடயமாக "ஒவ்வொருவரும் தமக்கு விருப்பமான கடவுளை வணங்குவதற்கு சுதந்திரம் உள்ளது" என்பதாகும். ஆனால், மனித உரிமை பிரகடனத்தில் மதம் - வழிபாடுகள் என்ற விடயங்கள் இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ரூஸ்வேல்டின் கூற்றுப்படி, ஒருவருடைய பின்பற்றும் உரிமை முழுமையாக மறுக்கப்பட்டுள்ளதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது கருத்துச் சுதந்திரமாக பார்க்கப்படுமெனில் நாம் வரலாற்றை மீண்டும் எழுத வேண்டிய நிலைமை உருவாகும். அனைத்து யூத புத்தங்களையும் வழிப்பாட்டுத் தலங்களையும் எரித்த ஹிட்லரை நோபல் பரிசுக்கு தகுதியானவராக அறிவிக்க நேரிடும். எனவே, மேற்படி இரு விடயங்களில் எதனை செய்ய வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும்.

அதனால் வியாழக்கிழமை என்ன நடக்கப் போகிறது என்பதை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். அழுத்தங்கள் இன்றி அவர்கள் மேற்படி விடயத்தை கருத்துச் சுதந்திரம் என்று சுட்டிக்காட்டினால் தெற்கு மற்றும் மேற்கத்தேய செல்வந்த நாடுகளுக்கு மத்தியில் முரண்பாடுகள் உருவாகும்.

அதேபோல், மேற்படி விடயத்தைப் பின்பற்றும் உரிமை என அவர்கள் சுட்டிக்காட்டினால் அதற்கான வரையறைகளையும் குறிப்பிட வேண்டும். இது கருத்துச் சுதந்திரம் என்பதைபோல் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவது தொடர்பிலான பிரச்சினையுமாகும். இதன்போது எவ்வாறான விடயங்களை கடைப்பிடிக்க வேண்டும். இது தொடர்பில் நாம் பொதுநலவாய நாடுகளுடன் பேச வேண்டுமா என எமது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடத்திலும் வினவினேன்.

அதனையடுத்து நீதி அமைச்சருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் முன்பாக பொதுநலவாய சபையின் செயலாளருடன் கலந்துரையாடுமாறு கூறினேன்.

பொதுநலவாய சபை, மனித உரிமைகள் தொடர்பிலான பெரும் பங்கை ஆற்றும் என நம்புகிறேன். இதனை தனியொரு தரப்பிற்கு மாத்திரம் வழங்கினால் அது அரசியல்மயமாகிவிடும். இது சகல மக்களினதும் உரிமையாக வேண்டும். இது பெரும் சவாலாகும். எனவே, மனித உரிமைகள் பேரவை மக்களின் கடைப்பிடிக்கும் உரிமைகளை வரையறுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை தீர்மானிக்க வேண்டும். இது ஒரு ஆரம்பம் மாத்திரமே.

எவ்வாறாயினும் தெற்கிலுள்ள நாடுகளின் தனித்துவமான பெறுமதிகள், தெற்கிலுள்ள நாடுகளின் விழுமியங்கள் மற்றும் உரிமைகளுக்கு மனித உரிமைகள் பேரவை மதிப்பளிக்க வேண்டியது அவசியமாகும். அதனைத் தடுப்பதற்கு அவசியமான அனைத்து முயற்சிகளையும் புறக்கணிக்குமாறு நான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளேன். பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அங்கத்தவர் என்ற வகையில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டிற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

"அனைத்து மதத் தலைவர்களையும் கௌரவமாக நடத்துங்கள்" என புத்தபெருமான் கூறியுள்ளார். பொதுநலவாயச் சபையிலும் குறித்த விடயத்தினை ஆராய இருக்கிறோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## காணிகளை...





அருகில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஒன்றுகூடியதுடன் அங்கிருந்து சென்று வெலிசுமன கடற்படை முகாமுக்கு முன்பாக கூடி எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது கடற்படை முகாம் முன்பாக பொலிஸார், கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு இருந்தனர். கலகம் அடக்கும் கடற்படையினர் தயார் நிலையில் இருந்ததுடன், கடற்படையினர் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை எடுத்துக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, போராட்டத்தின் நிறைவில் போராட்டக்காரர்களுக்கு பிஸ்கட், குளிர்பானம் வழங்க வந்த கடற்படையினருக்கு பொதுமக்கள் கோஷம் எழுப்பி கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதன்போது "எங்கட காணியை விட்டு எழும்பி போங்கோ. பிஸ்கட் சாப்பிடுவோம்" என கடற்படை அதிகாரியை பார்த்து காணி உரிமையாளர் ஒருவர் பேசினார்.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பஸ்களை கண்காணிக்க...

பொலன்னறுவை, மன்னம்பிட்டியவில் இடம்பெற்ற பஸ் விபத்தின் பின்னர் நாடு முழுவதிலும் உள்ள பஸ்கள் தொடர்பில் ஆராயவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் பஸ்கள் சேவையில் ஈடுபட்டுவருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸ் மா அதிபரின்...

ஒருவரை நியமிக்கும்போது அரசியலமைப்புப் பேரவையின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால், அவ்வாறானதொரு நடைமுறை பின்பற்றப்படவில்லை. ஆதலால், பொலிஸ் மா அதிபரின் நியமனம் சட்டத்துக்கு விரோதமானதாகும்.

நாட்டில் இப்போது பொலிஸ் மா அதிபர் என்று எவரும் கிடையாது.

பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. எனினும், இதுவரை பொருத்தமான ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்துவதற்கு அரசாங்கத்தால் முடியவில்லை.

சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட ஒருவரை பொலிஸ் மா அதிபராகக்கொண்டு இயங்கும் பொலிஸார், சாதாரண பொதுமக்களுக்கு நியாயத்தை எவ்வாறு நிலைநாட்டுவார்கள் என நாம் அரசாங்கத்திடம் கேட்கிறோம் என்றார்.

## யாழ். பல்கலைக்கழக...

பேராசிரியர் செ.கண்ணதாசன் ஆகியோர் பேரவையால் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அதனடிப்படையில் சிறிசற்குணராஜா முன்னிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை நியமிப்பதற்கான சுற்றுநிருபத்துக்கு அமைவாக துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தவர்களின் தகுதி, தராதரங்களின் அடிப்படையில் திறமைப் புள்ளியிடலுக்காக பல்கலைக்கழகப் பேரவை நேற்று புதன்கிழமை காலை கூடியது.

இதன்போது, துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ. கண்ணதாசன், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான தி. வேல்நம்பி மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் பி. வினோபாபா ஆகியோர் பேரவை உறுப்பினர்கள் முன்னிலையில் தமது அறிக்கைகளை முன்வைத்தனர்.

சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட புள்ளித் திட்டத்துக்கமைய ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் தனித் தனியாகப் புள்ளிகளை வழங்கினர். புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் முறையே பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஷ்ட பேராசிரியர் ரி. வேல்நம்பி, பேராசிரியர் செ. கண்ணதாசன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

அதனடிப்படையில், பேரவையின் பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் ஊடாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின்படி பல்கலைக்கழகப் பேரவையால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மூன்று பேரில் ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதால், மிக விரைவில் அடுத்த துணைவேந்தர் அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நிறுவனங்களில் முன்னேற்றம் காட்டாத அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

தனது அமைச்சின் கீழுள்ள ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் தமது நிறுவனத்தின் வருடாந்த வருமானம் தொடர்பில் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் - என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்திய பின்னரும் நிறுவனங்களில் முன்னேற்றம் காட்டாத அதிகாரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தான் தயங்கப்போவதில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பத்தரமுல்லை அமைச்சின் கேட்போர் கூடத்தில் அரசாங்க தொழிற்சாலை தொழிற் சங்கங்களுடன் நேற்று (12) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரச தொழிற்சாலைத் திணைக்களத்தில் பணியாற்றும் சில உயர் அதிகாரிகளின் மோசமான நிர்வாகத்தினாலும், முறையற்ற நிர்வாகத்தினாலும், திணைக்களம் தற்போது கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தொழிற்சங்க ஒன்றியம் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியது.

இதனால் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தை தொடர்ந்து பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள், திணைக்களத்தை பாதுகாக்கும் வகையில் அதனை மறுசீரமைக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதிலளித்து கருத்து தெரிவித்த அமைச்சர்,

அவ்வாறானதொரு தீர்மானத்தை திடீரென எடுப்பதற்குப் பதிலாக, திணைக்களத்தைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தி சில வேலை ஒழுங்கமைப்புகளை மேற்கொள்ள வேண்டும். நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்கள் தயாரிக்கும் பொருட்கள் பற்றிய விரிவான அறிக்கையை வழங்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், இந்த நிறுவனங்களைக் கட்டியெழுப்ப முடியும்.

அரசியல் செல்வாக்கால் மட்டும் பல நிறுவனங்கள் அழிக்கப்படவில்லை. அதிகாரிகளின் வாக்குவாதத்தினாலும் அழிக்கப்படுகின்றன. இலஞ்சம், ஊழல், வீண் விரயம் என்று பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரையும் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்த வீழ்ச்சியால் பாதிக்கப்படுவது அரசியல்வாதிகள் மட்டுமல்ல. அரச அதிகாரிகள் மற்றும் அரச ஊழியர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

நிறுவனத் தலைவர்கள் தங்கள் நிறுவனத்திலிருந்து வருடாந்த வருமானம் ஈட்டுவதற்கான திட்டத்தை கட்டாயம் உருவாக்க வேண்டும். திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி, முன்னேற்றத்தைக் காட்டுங்கள். இல்லை என்றால் அந்த அதிகாரிகள் தொடர்பான முடிவுகளை எடுக்கவும் நான் தயங்க மாட்டேன் என்றார்.

# அமைச்சர் அலி சப்ரி இந்தோனேசியா பயணம்

இந்தோனேசியாவில் நாளை (14) இடம்பெறவுள்ள 30ஆவது ஆசியன் பிராந்திய மன்றத்தின் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இந்தோனேசியாவின் ஜகார்த்தாவுக்கு செல்லவுள்ளார்.

ஆசியன் பிராந்திய மன்றம் என்பது 1994ஆம் ஆண்டு தாய்லாந்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆசிய-பசிபிக் பிராந்தியத்தை மையமாகக்கொண்ட பாதுகாப்பு உரையாடல் பொறிமுறையாகும். இது பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் செழுமைக்கான சவால்களை அங்கீகரிக்கும் அதே வேளை, அனைத்து பங்குதாரர்களுக்கும் பயனளிக்கும் திறந்த மற்றும் உள்ளடக்கிய உரையாடல் மூலம் கூட்டாக பிராந்திய மேம்பாடு மற்றும் செழிப்பை மேம்படுத்த முயல்கிறது. ஆசியன் பிராந்திய மன்றம 27 உறுப்புநாடுகளைக் கொண்டுள்ளது மற்றும் இலங்கை 2007 முதல் ஆசியன் பிராந்திய மன்றத்தில் உறுப்பினராக உள்ளது.

ஆசியானின் தற்போதைய தலைவரான இந்தோனேஷியா இந்த ஆண்டு மன்றத்தின் கூட்டத்தொடரை நடத்துகிறது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதன்போது, வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# 5 இலட்சம் கோப்புகளில் 31,000 பேரே வரி செலுத்துகின்றனர்

## தேசிய பொருளாதாரம், பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அறிவிப்பு






நாட்டில் தனிநபர் வருமான வரிக் கோப்புகள் 5 இலட்சம் காணப்பட்டாலும் அவற்றில் 31,000 பேரே வரி செலுத்துவதாக தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

இந்நாட்டில் 1,05,000 வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இந்த நிறுவனங்களிலிருந்து 82% வரி வருமானம் 328 நிறுவனங்களிலிருந்தே கிடைப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தால் கடன் வழங்கும் போது அடைந்திருக்க வேண்டிய விடயங்களான நாட்டின் பணவீக்கம், நாட்டின் கையிருப்பு அளவு மற்றும் அரசாங்க வருமானம் தொடர்பான இரண்டாவது மீளாய்வு இடம்பெறும் டிசம்பர் மாதத்தில் மேம்படுத்தப்பட்ட நிலையில் இருப்பது முக்கியமானது என குழுவின் தலைவர் இதன்போது வலியுறுத்தினார்.

அதனால் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு இலங்கை சுங்கத் திணைக்களம், மது வரித் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றுடன் தனது குழு தொடர்ந்தும் கலந்துரையாடல் மேற்கொண்டு அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான வசதிகளை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தலைவர் குறிப்பிட்டார்.

தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இந்த வரி வருமானங்களைச் சேர்ப்பதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு முடியாமல் போயுள்ளமை தொடர்பில் விரிவாகக் கருத்துத் தெரிவித்த குழுவின் தலைவர், வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், குழு என்ற வகையில் அதில் சாதகமான தலையீட்டை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தற்பொழுது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையான 904 பில்லியன் ரூபா தொகையை அறவிடுவது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. வரியை அறவிடுவதை முறைமைப்படுத்த உண்ணாட்டரசு சிறைச் சட்டத்தை திருத்துவதற்கும், வரி மேன் முறையீட்டு ஆணைக்குழுவை இரத்துச் செய்வது தொடர்பிலும் நீதி அமைச்சருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழுவின் தலைவர் தெரிவித்தார். அத்துடன், தற்பொழுது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தனது உதவியை முழுமையாக வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் குறிப்பிடுகையில், தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதற்கு தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய குழுவினால் வழங்கப்படும் ஆதரவுக்கு நன்றியை தெரிவித்தார். 2023ஆம் ஆண்டுக்கு அரசாங்கத்தின் வரி வருமான இலக்கான 1.6 ட்ரில்லியன் ரூபாவை முதலாவது 6 மாதங்களில் 40%ஆகவும், இரண்டாவது 6 மாதங்களில் 60% ஆகவும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்ததாகவும், முதலாவது 6 மாதத்துக்கான இலக்கை தற்பொழுது அடைந்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். அத்துடன், அடுத்த 6 மாதங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துவருவதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது குழுவின் தலைவர் குறிப்பிடுகையில், வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்வதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பொறிமுறையொன்று அமைப்பது அவசியமானது எனத் தெரிவித்தார். இந்நாட்டில் நிறுவனங்களைப் பதிவுசெய்வதற்காக வழங்கப்படும் தகவல்கள் உண்மையானவை அல்ல என்பதால் வரி அறவிடும்போது சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவதாக குழுவின் உறுப்பினர்களும், அதிகாரிகளும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், இலங்கை சுங்கம், மது வரித் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்த டிஜிட்டல் தகவல் கட்டமைப்பொன்றை விரைவாக தயாரிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் நாட்டின் தனிநபர் வரிக் கோப்புகள் மீள் பதிவுசெய்யும் அவசியம் தொடர்பிலும் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான விமலவீர திசாநாயக்க, எரான் விக்ரமரத்ன, சுதத் மஞ்சுள, குணதிலக்க ராஜபக்ஷ, தம்மிக்க பெரேரா ஆகியோரும் பாராளுமன்ற உறுப்பினர்களான உதயன கிரிந்திகொட, கருணாதாச கொடிதுவக்கு, மதுர விதானகே, மொஹமட் முஸம்மில் ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன், உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் ஆனி மாதம் 28ஆம் நாள்
வியாழக்கிழமை

மேஷம்: தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள். வாய்வார்த்தைகளால் குழப்பங்கள் ஏற்படும்.

ரிஷபம்: உடல் நலம் சீராக இருக்கும், நண்பர்கள் சந்திப்பால் நன்மைகள் உதவிகள் உள்ளன.

மிதுனம்: உங்கள் மதிப்பினை நீங்களே கெடுத்துக்கொள்ளாதீர்கள். உணவு, உறக்கம் இன்றி சிரமப்படுவீர்கள்.

கடகம்: எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள், சகாக்கள் மூலம் உதவிகளைப் பெறுவீர்கள்.

சிம்மம்: எதிர்கால வாழ்க்கைப் பற்றிய சிந்தைகளில் இருப்பீர்கள், நண்பரின் உதவியால் ஆனந்தமடைவீர்கள்.

கன்னி: நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும், யாரையும் வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள்.

துலாம்: உடலைக் கெடுக்கும் எந்த முயற்சியும் நன்மை தராது, கோபத்தை குறைத்துக் கொண்டால் லாபம் உண்டு.

விருச்சிகம்: காதல், திருமணம் கைகூடும், உல்லாசமாகவும், மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள்.

தனுசு: சில விடயங்களுக்காக மற்றவர் களுக்கு நீங்கள் கட்டுப்பட்டே ஆக வேண்டும். டென்ஷன் வேண்டாம்.

மகரம்: புத்திரர்களால் சற்று மனக்கவலை ஏற்படும், அதிர்ஷ்ட வாய்ப்புகளை நழுவ விடுவீர்கள்.

கும்பம்: குடும்பத்தில் மகிழ்ச்சியும் அன்பும் அமையும் நாள், உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள்.

மீனம்: நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**திதி :** ஏகாதசி பி.ப.6.25 வரை பின் துவாதசி (தேய்)
**நட்சத்திரம் :** கார்த்திகை பி.ப.8.52 வரை பின் ரோஹிணி
**யோகம் :** மரண யோகம முழுவதும்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப.10.57 - 11.57 மணி வரை
**ராகுகாலம் :** 1.27 - 2.57 மணி வரை
**எமகண்டம்:** 5.57- 7.27 மணி வரை
**குளிகை :** 8.57 - 10.27 மணி வரை
**சந்திராஷ்டமம்:** துலா ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** பரணி, பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** கார்த்திகை – ஏகாதசி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பேராதனையில் மேலுமொரு மரணம்

வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சை பெறுவதற்காக பேராதனை வைத்தியசாலைக்கு வந்ததாக குறிப்பிடப்படும் 21 வயது யுவதிக்கு, இரு ஊசிகள் ஏற்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக பேராதெனிய மருத்துவமனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுகன்னாவ, பொத்தபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த சமுதி சந்திபனி மதுஷிகா என்றழைக்கப்படும் யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வயிற்றில் ஏற்பட்ட உபாதையின் காரணமாக நேற்று முன்தினம் (11) பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, தங்கி சிகிச்சைபெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், இவர் நேற்று (12) காலை அவர் தங்கியிருந்த வார்ட்டின் தாதியொருவரால் இரு ஊசிகள் ஏற்றப்பட்டுள்ளன. அதன்போது ஏற்பட்ட வலியால் கூச்சலிட்டுள்ளதுடன், வாந்தியெடுத்துள்ளார். அதன்பின்னர் சிறிதுநேரத்தில் அவர் உயிரிழந்துவிட்டதாக யுவதியின் தாய் மாயா இந்திராணி தெரிவித்துள்ளார்.

# காலி கடற்பகுதியில் தீக்காயங்களுடன் மீனவர் மீட்பு



காலியிலிருந்து 431 கடல் மைல் தொலைவிலுள்ள (798 கிலோ மீற்றர்) ஆழ்கடல் பகுதியில் இடம்பெற்ற விபத்தால் தீக்காயங்களுடன் மீனவர் ஒருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார்.

நீண்டநாள் மீன்பிடி படகிலிருந்தே இவர் மீட்கப்பட்டுள்ளதுடன், சிகிச்சைக்காக அவர் கராபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நீண்டநாள் மீன்பிடிப் படகு நீர்கொழும்பு மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீனவர்கள் ஐவருடன் கடந்த மாதம் 22 ஆம் திகதி புறப்பட்டுச் சென்றுள்ளதுடன், காலியிலிருந்து இலங்கைக்கு தென்மேற்கு நோக்கிய ஆழ்கடலில் வெளிநாட்டு படகொன்றுடன் மோதியுள்ளது.

இதன்போது, குறித்த வெளிநாட்டுப் படகில் இருந்தவர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் இந்த நீண்டநாள் மீன்பிடிப் படகிலிருந்த இலங்கை மீனவரொருவர் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தால் கடற்படைத் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமையவே மீனவர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார்.

# முத்துவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம்

கொட்டகலை நிருபர்

நுவரெலியா, கொட்டகலை நகர் அருள்மிகு ஸ்ரீ முத்துவிநாயகர் சுவாமி தேவஸ்தான இராஜகோபுர கும்பாபிஷேகம் ஜூலை மாதம் 16ஆம் திகதி ஸ்ரீ முத்து விநாயகருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி நாளை (14) விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் குடமுழுக்கு விழாவும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

கும்பாபிஷேகம் தேவஸ்தான பிரதமகுரு சாகித்திய சிரோண்மணி. தற்புருஷ சிவாச்சாரியார் பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ ச.ஸ்கந்தராஜ குருக்கள் தலைமையில் ஏனைய சிவாச்சாரியர்கள் நடத்தி வைப்பார்கள். அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றார்கள். இக்கும்பாபிஷேகம் தேவஸ்தான பரிபாலன சபையினரால் முன்னெடுக்கப்படவுள்ளது.


# வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/**




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூலை 13 ஆம் திகதி, வியாழக்கிழமை

## சுகாதார அமைச்சின் கவனத்திற்கு

இதய நோயாளியான தந்தைக்கு சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளும்போது ஏற்பட்ட மோசமான அனுபவம் குறித்து 'பேஸ்புக்'கில் பதிவிட்ட ஆசிரியை ஒருவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

களுத்துறை தெற்கு பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் தனது வீட்டிற்கு வந்து மேற்படி பதிவு தொடர்பில் விசாரித்ததாகவும், அந்தப் பதிவை நீக்குமாறு பொலிஸ் அதிகாரியொருவர் வற்புறுத்தியதாகவும், இது தொடர்பில் மேலும் விசாரணை நடத்த பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு தன்னிடம் கூறியதாகவும் அந்தப் பெண் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாகொட வைத்தியசாலையில் தனது தந்தைக்கு 'எஞ்சியொகிராம்' சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும், அது தொடர்பில் தமக்கு வைத்தியசாலையினால் – தகவல்கள் எவையுமற்ற வெற்று 'சிடி' (இறுவட்டு) வழங்கப்பட்டதாகவும், அதுவே தன்னை 'பேஸ்புக்'கில் பதிவிடத் தூண்டியதாகவும் குறித்த பெண் தெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சினைக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறியாத வைத்தியசாலை நிர்வாகம் பொலிஸாரை மேவிவிட்டு இப்படி நடந்துகொண்டமைக்கான காரணம் புரியவில்லை. சுகாதார அமைச்சும் இவ்விடயத்தில் மௌனம் காப்பது துயரமானது.

மருத்துவத்துறையில் கவனக்குறைவு என்பது ஓர் உலகளாவிய பிரச்சினை. தனிப்பட்ட மருத்துவரின் அல்லது மருத்துவக்குழுவினரின் கவனக்குறைவால் நோயாளிகள் பாதிக்கப்படும்போது, அதை நிரூபிப்பதன் வழியாக, மருத்துவமனை நிர்வாகத்தினரிடமிருந்து நோயாளிகள் இழப்பீடு கோர முடியும்.

மருத்துவர் ஒருவர், நோயாளியைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேயே சிகிச்சையை வழங்குகிறார். சில சந்தர்ப்ப சூழலில் அந்தச் சிகிச்சை முறையால் நோயாளி பாதிக்கப்படும்போது, மருத்துவர் அதைத் திட்டமிட்டு உள்நோக்கத்தோடு செய்ததாகக் கருத முடியாது என்பது சட்டவாளர்களின் கருத்து. அத்துடன் இந்தக் கவனக்குறைவைக் குற்றவியல் குற்றமாகக் கருதினால், மற்ற மருத்துவர்கள் நோயாளியின் உயிரைக் காப்பாற்றும் இக்கட்டான சூழலில் முக்கியமான முடிவுகளை எடுக்காமல் போய்விடலாம் அல்லது சிகிச்சையளிக்காமல் தவிர்த்துவிடலாம் என்ற அச்சம் உள்ளது.

மருத்துவர்களின் பற்றாக்குறை, அதீத பணிச்சுமை, மருத்துவக் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகள், சிகிச்சை தொடர்பான பொதுவான வழிகாட்டுதல்கள் இல்லாமை, தனிநபரைச் சார்ந்த சிகிச்சை முறைகள், மருத்துவத்துறைகளுக்கு இடையேயான தகவல் தொடர்பின்மை, வெளிப்படைத்தன்மை இன்மை, நோய் - சிகிச்சை தொடர்பான தகவல்களை நோயாளிகளிடமும் அவர்களின் குடும்பத்தினரிடமும் முறையாகத் தெரிவிக்காதமை போன்றவை கவனக்குறைவுக்கான காரணிகளாகச் சொல்லப்படுகின்றன.

அரச மருத்துவமனைகளின் வெளிப்படைத்தன்மை காரணமாகக் கவனக்குறைவுகள் உடனடியாக வெளிச்சத்துக்கு வந்துவிடுகின்றன. இச்சம்பவங்கள் அரச மருத்துவமனைகளில் மட்டுமல்ல, எல்லா மருத்துவமனைகளிலும் அவ்வப்போது நடப்பதுதான்.

தனிப்பட்ட மருத்துவரின் தவறாக இருந்தாலும் கூட, நிர்வாகம் உடனடியாக அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுபோன்ற கொந்தளிப்பான சூழலில், சமூக வலைத்தளங்கள் கொடுக்கக்கூடிய அழுத்தத்துக்கு அடிபணியாமல், அரச நிர்வாகம் நிதானமாகவும் பொறுமையாகவும் பிரச்சினையைக் கையாள வேண்டும்.

பிரச்சினையின் ஆழத்தை உணர்ந்து, முறையான விசாரணைக்குழுவை முதலில் அமைக்க வேண்டும். விசாரணைக்குழுவின் முடிவுகள் வரும்வரை, பாதிக்கப்பட்ட குடும்பத்துக்குத் துணையாக அரச நிர்வாகம் நிற்க வேண்டும். அவர்களின் வலியை புரிந்துகொண்டு அவர்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டும்.

விசாரணைக் குழுவின் முடிவுகளைப் பொறுத்தே அடுத்தகட்ட நடவடிக்கைகள் இருக்க வேண்டும். வெளிப்புற அழுத்தங்களுக்குப் பயந்து அரசாங்கம் எடுக்கும் தன்னிச்சையான முடிவுகள் மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும். அது அரச மருத்துவமனைகளின் சிகிச்சை மீதான நம்பகத்தன்மையைக் குலைத்துவிடும் என்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரச மருத்துவமனைகளில் மருத்துவ ஊழியர்கள், மருத்துவர்கள் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அனைத்து சிகிச்சை முறைகளிலும் அந்த சிகிச்சை சார்ந்த பொதுவான ஒழுங்குமுறைகளை (Protocols) உருவாக்க வேண்டும். அனைத்து சிகிச்சைக்கும், சிகிச்சை தொடர்பான பொதுச் செயற்றிட்டங்களையும் அதைக் கண்காணிக்கும் வழிமுறைகளையும் (Standard Treatment Guidelines & Check list) உருவாக்க வேண்டும்.

சிகிச்சை முறைகள் என்பவை எப்போதும் தனிநபரை மட்டும் சார்ந்தவையாக இல்லாமல், கூட்டுச்செயற்பாடாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். அதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்க வேண்டும். சிகிச்சையின்போது அதன் படிநிலைகளைப் பலரும் கண்காணிக்கும் வகையில் ஒழுங்குமுறைகளை உருவாக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக, சுகாதாரத்துறையில் பணியிடங்கள் ஒப்பந்தப்பணி அடிப்படையிலேயே நிரப்பப்படுகின்றன. ஒப்பந்தப்பணியில் இருக்கும் சுகாதாரப் பணியாளர்களுக்குப் பல்வேறு நெருக்கடிகள் இருக்கும். அதன் விளைவாகக்கூட கவனக்குறைவுகள் அதிகமாக நடக்கலாம். அதனால் அனைத்துப் பணியிடங்களும் முறையாக நிரப்பப்பட வேண்டும். அனுபவம் அதில் கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயம்.

''கவனக்குறைவு போன்ற தனிநபர்களின் பலவீனங்களைக் குறைக்க வேண்டுமானால், ஒரு நிறுவனமாக அதற்கான செயற்றிட்டங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். மருத்துவர்கள் மட்டுமல்லாது, பல அடுக்குப் பரிசோதனைகளுக்கான செயல்முறைகளை உருவாக்கி, அதைப் பின்பற்றுவதன் வழியாக இப்படிப்பட்ட கவனக்குறைவுகளைத் தடுக்கலாம்'' என உலக சுகாதார ஸ்தாபனம் சமீபத்தில் தெரிவித்திருக்கிறது.

சமீப காலத்தில் நமது பொது சுகாதாரக் கட்டமைப்பு தொடர்ச்சியாகக் குறிவைக்கப்படுகிறது. போதாக்குறைக்கு நாமே நம் கட்டமைப்பை விட்டுக்கொடுத்தாலோ, அதன் குறைகளை நிவர்த்திசெய்யாமல் இருந்தாலோ, அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சித் திட்டங்களை அலட்சியப்படுத்தினாலோ உறுதியான இந்தப் பொது சுகாதாரக் கட்டமைப்பு வலுவிழந்து உடைவதைக் காண வேண்டியிருக்கும்.

நாகொட வைத்தியசாலையில் தவறுகள் ஏற்பட்டிருக்குமாயின் அதனைத் திருத்தி வைத்தியசாலையின் பெருந்தன்மையை காட்டாமல் பாதிக்கப்பட்ட நோயாளரிடம் முரண்படுவது நல்லதல்ல. சுகாதார அமைச்சு மேற்கண்ட விடயங்களை கவனத்தில் கொள்வது நல்லது.

# போராட்டங்களுக்கான சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு பதிலாக...

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்துக்குப் பிறகு பங்குச்சந்தையில் பெரிய மேம்பாடு காணப்பட்டது. ஆனால், தேசிய பொருளாதாரம் தொடர்ந்தும் ஆழமான நெருக்கடிக்குள்ளேயே இருக்கிறது. அது உற்பத்தி ஆற்றலைக் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை. மந்தநிலையில் இருந்து வெளியே வருவதற்கு பொதுமக்களிடம் கொள்வனவு சக்தியும் இல்லை. உற்பத்திச் சங்கிலியின் உச்சமுனையில் இருக்கும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் தங்களது பொருட்களுக்கும் சேவைகளுக்கும் பாவனையாளர்கள் மத்தியில் கிராக்கி இல்லை என்று புலம்புகிறார்கள். அவர்களின் உற்பத்திகளை வாங்குவதற்கு மக்களிடம் பணமில்லை.

பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னதாக தொழிற்சாலையில் இருந்து தினமும் 60 லொறிகள் வெளியே சென்ற இடத்தில் தற்போது மூன்று லொறிகளே போகின்றன அல்லது தொழிற்சாலைகள் அவற்றின் 200 ஊழியர்களில் 50 பேரைக் குறைப்புச் செய்திருக்கின்றன என்று இதற்கு உதாரணம் கூறப்படுகிறது. அரசுக்கு சொந்தமான செய்திப் பத்திரிகைகளின் விற்பனையில் கடும் வீழ்ச்சி இருப்பதாக பத்திரிகை விநியோகிப்பவர் கூறுகிறார். அலுவலகங்கள் பத்திரிகைகளை கொள்வனவு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தன. தன்னால் பத்திரிகைகள் விநியோகம் செய்யப்பட்ட 18 அலுவலகங்களில் 15 மூடப்பட்டுவிட்டன என்று அவர் விளக்கம் தந்தார்.

பொருளாதார மீட்சிக்கான சர்வதேச நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தன்னாலியன்றவரை நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. பொருளாதாரத்தை உந்தித் தள்ளக்கூடிய வளங்களின் பெரியளவிலான உட்பாய்ச்சலைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தினால் மேம்பாட்டை ஏற்படுத்தமுடியும். ஏனைய சர்வதேச பொருளாதார பங்காளர்கள் தங்களுக்குத் தேவையான உறுதிமொழிகளை பெறுவதற்கான சர்வதேச நியமமாக சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் விளங்குகிறது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் ஈடுபடுவதன் மூலம் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தினால் வரையறுக்கப்பட்ட பொருளாதார இலக்குகளை அடைவதற்கான கடினமான பயணத்தைத் தொடங்கியிருக்கிறது.

வரி வருவாயை அதிகரிப்பதாக இருந்தாலென்ன, அல்லது விதந்துரைக்கப்பட்ட சதவீதத்தினால் பட்ஜெட் பற்றாக்குறையை குறைப்பதாக இருந்தாலென்ன, பொருளாதார நிலைபேறுக்கான இலக்குகளை சர்வதேச நாணய நிதியமே வரையறை செய்கிறது. அந்த இலக்குகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. களவாடப்பட்ட சொத்துகளை மீட்பதற்கு முயற்சியொன்றை மேற்கொள்ளாமல் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளின் சுமை கோர்ப்பரேட் துறையையும் அதன் ஆதரவாளர்களையும் பாதிக்காத வகையிலான பாதையையே அரசாங்கம் தெரிவுசெய்திருக்கிறது.

மறுசீரமைப்பு செயன்முறையின் பிரதான அம்சங்களில் ஒன்று முன்னைய பல தசாப்தங்களாக அரசாங்கங்களினால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த சமூக நலன்புரித் திட்டமாகும். 'அஸ்வெசும' இருபது இலட்சம் வறிய மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கு பிறகு நாற்பது இலட்சம் பேர் வறுமைக்குள் வீழ்ந்துவிட்டதாகவும் தற்போது எழுபது இலட்சம் பேர் வறுமையில் வாழ்வதாகவும் லேர்ன் ஏசியாவின் (Learning Initiatives on Reforms for Network Economies Asia -- LIRNE asia) தேசிய ஆய்வு காட்டுகிறது.

ஆனால், 'அஸ்வெசும'வின் பயனாளிகளாக யார் யார் இருக்கவேண்டும் என்பதில் உள்ளூர் மட்டத்தில் தகராறு மூண்டிருக்கும் நிலையில், பயனாளிகளைத் தெரிவுசெய்யும் செயன்முறைகள் பெருமளவு பிரச்சினையை தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கலாம். அடுத்து பெரிதாக பாதிக்கப்படுவது ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கை நிதியமுமே. இந்த ஓய்வூதிய நிதியங்கள் மீது வரி அறவிடுவதும் அவை பெறப்போகும் வட்டியில் குறைப்புச் செய்வதும் தற்போது குறைந்தளவு வேதனையையே தருகின்றது. ஆனால், பிறகு தாங்கள் பெறும் பணம் பெரிய தொகையாக இல்லை என்று ஓய்வுபெறுபவர்கள் தெரிந்துகொள்ளும்போது அது பெரிய வேதனையை தோற்றுவிக்கும்.

### குழப்பமான நிலை

தனது அரசியல் எதிரிகளாக இருந்த, தொடர்ந்தும் அரசியல் எதிரிகளாக இருக்கக்கூடிய ஆளும் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அரசாங்கத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தலைமை தாங்கக்கூடியதாக இருப்பதே அவரது சாதனையாகும். பெரும்பான்மையான மக்களுக்கு வேதனையைத் தரக்கூடிய பொருளாதார மறுசீரமைப்புக்கு வழிவகுக்கும் சட்டங்களை அவர்களைக் கொண்டு ஜனாதிபதி நிறைவேற்றுகின்றார். ஊழியர் சேமலாப நிதியம் 2038ஆம் ஆண்டளவில் 12 ட்ரில்லியன் ரூபா அளவில் (3900 கோடி அமெரிக்க டொலர்கள்) இழப்பைச் சந்திக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியிருக்கிறார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக ஊழியர் சேமலாப நிதியத்தினதும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினதும் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப் படவில்லை என்பது பொதுநிதிக்குழுவினால் அவர்கள் விசாரிக்கப்பட்டபோது தெரியவந்தது என்று பொருளாதார சிந்தனை நிறுவனமான வெரைட் ரிசேர்ச்சினால் (Verite Research) வெளியிடப்பட்ட அறிக்கையொன்றை மேற்கோள் காட்டி பிரேமதாச கூறினார். தொழிலாளர்களுக்கு ஏற்படப்போகின்ற இழப்பை எந்த அரசாங்க நிறுவனமும் மதிப்பீடு செய்யவில்லை. அந்த இழப்பு 12 ட்ரில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதாக இருக்கும் என்று வெரைட் ரிசேர்ச் அதன் மதிப்பீட்டில் கூறியிருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தங்களது வருமானத்திற்குள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாத நிலையில் இருக்கும் மக்கள் மத்தியில் உள்ள பொருளாதார அதிருப்தியை ஆளும் கட்சி உறுப்பினர்கள் அறிவார்கள். அரசாங்கத்தின் - குறிப்பாக ஜனாதிபதியின் செல்வாக்கு அதிகரிக்கின்றது, ஆனால், ஒட்டுமொத்தத்தில் செல்வாக்கு மட்டம் தொடர்ந்தும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறது என்று கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன. 2022 ஒக்டோபரிலும் 2023 பெப்ரவரியில் பதிவான அரசாங்கத்தின் அங்கீகார வீதம் (10 சதவீதம்) 2023 ஜூனில் இரண்டு மடங்காக (21 சதவீதம்) அதிகரித்ததாக வெரைட் ரிசேர்ச்சின் தேசத்தின் மனநிலை (Mood of the Nation poll) என்ற தலைப்பிலான மிகவும் அண்மைய கருத்துக்கணிப்பு கூறுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை தற்போதைக்கு நடத்தக்கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதற்கு இதுவே காரணமாகும். நான்கு மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டிருக்கவேண்டிய அந்தத் தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. மாகாணசபைத் தேர்தல்களும் நடத்தப்படாமல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களும் தொடர்ந்து காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுமெனில் அது பொறுத்துக்கொள்ள முடியாத எதேச்சதிகாரத்தை நோக்கிய ஒரு நகர்வுக்கான அறியாக இருக்கும். இது கவலை தரும் ஒரு போக்காகும்.

இத்தகைய சூழ்நிலைகளில், அரசாங்கத்துக்கும் எதிரணிக்கும் இடையிலான துருவமயமாதல் மேலும் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றுகின்றது. அது தனக்கிருக்கும் பாராளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி புதிய தேர்தல்களை நடத்துவதற்கு பதிலாக பழைய உள்ளூராட்சி சபைகளை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவது, ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவது, பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டத்தின் வீச்செல்லையை விரிவுபடுத்துவது போன்ற சர்ச்சைக்குரிய சட்டங்களை கொண்டுவருவதில் அரசாங்கம் நாட்டம் காட்டுகிறது. ஆனால், இந்த பாராளுமன்ற பெரும்பான்மை பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னதாக வேறுபட்ட ஒரு நேரத்தில் தெரிவுசெய்யப்பட்டதாகும்.

தற்போது அரசாங்கத்தின் செல்வாக்கு 20 சதவீத மட்டத்தில் இருக்கும் நிலையில், அரசாங்கம் செய்வதை மக்கள் ஆதரிக்கப் போவதில்லை என்பதாக அதை நோக்கமுடியும்.

இதனால் மக்கள் செல்வாக்கை இழந்த அரசாங்கங்களை தேர்தல்களில் மாற்றுவதற்கு நீண்டகாலமாகப் பழக்கப்பட்டுப்போன ஒரு நாட்டில் குழப்பகரமான நிலை ஒன்று தோன்றுவதற்கான ஆபத்து இருக்கிறது. மக்கள் தொடர்ந்தும் அமைதியாக இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது நியாயமானதல்ல. இன்னொரு 'அரகலய'வுக்கு இது வழிவகுக்கக்கூடும்.

### தேவையான ஒத்துழைப்பு

பிரான்ஸ் நாட்டின் தற்போதைய நிலை மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை தணிப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் இலங்கையில் நேரக்கூடியது என்ன என்பதற்கு ஓர் எச்சரிக்கையாகும். அல்ஜீரிய வம்சாவளியைச் சேர்ந்த 17 வயதான சிறுவனை பொலிஸ் அதிகாரியொருவர் சுட்டுக்கொலை செய்ததையடுத்து பிரான்ஸில் கலவரங்களும் சூறையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. இச்சம்பவத்தினால் மக்கள் ஆவேசமடைந்திருக் கிறார்கள். இனவெறியுடன் கொடூரமான முறையில் பொலிஸார் நடந்துகொள்வதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

பாரிஸ் உட்பட ஏனைய நகரங்களுக்கும் கலவரங்கள் விரைவாக பரவின. பாரிஸில் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்ட கலகக்காரர்கள் வாகனங்களுக்கும் கட்டடங்களுக்கும் தீவைத்ததுடன், கடைகளையும் வர்த்தக நிறுவனங்களையும் சூறையாடினர். இதுவரையில் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். 100 கோடி டொலர்களுக்கும் அதிகமான பெறுமதியான சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. கலகக்காரர்களில் பலர் இளைஞர்கள். பொலிஸார் அதீத படைபலத்தைப் பிரயோகிப்பதாகவும் சிறுபான்மையினரை இலக்குவைப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்ற ஒரு நாட்டில் தாங்கள் ஓரங்கட்டப்பட்டிருப்பதாக அவர்கள் உணர்கிறார்கள்.

தொழில் வாய்ப்புகள் இழப்பு மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியின் விளைவான பொருளாதார இடர்பாடுகளைத் தணிப்பதற்கு சமூக நலன்புரி உதவியாக விநியோகிப்பதற்கு அரசாங்கத்திடம் பொருளாதார வளங்கள் இல்லாதமையே தற்போது இலங்கையில் உள்ள பிரச்சினையாகும். கடந்த வருடம் ஏழுக்கும் அதிகமான சதவீதத்தினால் சுருங்கிய தேசிய பொருளாதாரம் தொடர்ந்தும் கீழ் நோக்கிச்செல்லும் என்றும் இவ்வருடம் மேலும் மூன்று சதவீதத்தினால் சுருங்கும் என்றும் உலக வங்கி மதிப்பிடுகிறது.

தேர்தல்களுக்கு பதிலாக கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளை மீண்டும் செயற்படவைத்து எட்டு ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு மீண்டும் பதவிகளை கொடுப்பதற்கு அரசாங்கம் கொண்டிருக்கும் யோசனை தங்களது தொழில்களை இழந்து பொருளாதார இடர்பாடுகளில் உழலும் மக்களைச் சீற்றங்கொள்ள வைக்கும். இது ஊழல் மோசடிக்காரர்களை வீட்டுக்கு அனுப்பி முறைமை மாற்றம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்று 'அரகலய' கொண்டிருந்த நிறைவு செய்யப்படாத இலட்சியத்தை நினைவுபடுத்துகிறது.

அண்மையில் பொது நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களை தவறாக வழிநடத்தக்கூடிய வாதங்களை தவிர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், நாடு எதிர்நோக்கும் சவால்களைக் கையாள அரசாங்கத்துடன் இணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான முழு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுத்தார். ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சி ஆதரவு அளிக்கக்கூடிய, ஆதரவு அளிக்கவேண்டிய ஒரு பிரச்சினை இருக்கிறது. இனநெருக்கடிக்கு தீர்வைக்கண்டு தேசிய நல்லிணக்க குறிக்கோளை அடைவதே அதுவாகும்.

அதில் வெற்றியடைய முடியுமென்றால் பெரிய அளவில் சர்வதேச ஆதரவை திரட்டக்கூடியதாக இருக்கும். இந்த விவகாரத்தில் ஜனாதிபதி மெச்சத்தக்க தொலைநோக்கையும் துணிச்சலையும் வெளிக்காட்டியிருக்கிறார். இந்த பிரச்சினைக்கு காணப்படக்கூடிய தீர்வு நாட்டை ஐக்கியப்படுத்தி இலங்கையின் எதிர்காலத்திலும் பொருளாதார முதலீடுகளிலும் சர்வதேச சமூகத்துக்கு புதிய ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு உதவும். நாம் எல்லோரும் ஒன்றிணைந்து இதைச் செய்தோம் என்று கூறும்போது வெற்றி நிச்சயமாகும்.



கலாநிதி
ஜெகான் பெரேரா




## இன்றைய நாளில்...

- 1844 – இலங்கையில் பொலிஸ் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன.
- 1869 – இந்துப் பிள்ளைகளின் கல்விக்கு ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார்.
- 1919 – பிரித்தானியாவின் வான்கப்பலான ஆர்-34, அட்லாண்டிக் பெருங்கடலின் மேலாக 182 மணிநேரம் பறந்து, தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு, இங்கிலாந்தின் நோர்போக்கில் தரையிறங்கியது.
- 1930 – முதலாவது உலகக்கிண்ணக் கால்பந்துப் போட்டிகள் உருகுவேயில் ஆரம்பமாயின. லூசியென் லோரென்ட், பிரான்ஸுக்காக மெக்சிகோவுக்கு எதிராக முதலாவது கோலைப் போட்டார்.
- 1989 – இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் மற்றும் வெ.யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1997 – சே குவேராவினதும் தோழர்களினதும் உடல் எச்சங்கள் கியூபாவுக்குக் கொண்டுவரப்பட்டன.
- 2011 – தெற்கு சூடான் ஐக்கிய நாடுகளில் இணைந்தது.
- 2016 – ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் டேவிட் கேமரன் தனது பதவியைத் துறந்தார். தெரசா மே புதிய பிரதமரானார்.

# அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களுக்கு எதிராக மாத்தளையில் சட்ட நடவடிக்கை

மாத்தளை நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் வீதிப் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் இல்லாமல் சேவையில் ஈடுபடும் சகல தனியார் பஸ்களையும் பொலிஸாரின் பொறுப்பில் எடுத்து அந்த வாகனங்களின் உரிமையாளருக்கு எதிராக துரித சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக மாத்தளை போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை நகரிலிருந்து ஏனைய நகர மற்றும் கிராமிய பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பஸ்கள் வீதிப் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் இல்லாமல் சேவையில் ஈடுபடுத்தபட்டுள்ளதாகவும் சில பஸ்கள் போக்குவரத்துக்குத் தகுதியற்றதென தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இருந்தபோதும், அதனையும் மீறி சில போக்குவரத்து பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இவற்றை இனங்கண்டு உரிமையாளருக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மாத்தளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக நாட்டில் பதிவாகும் விபத்துகள், போக்குவரத்து தடை விதிக்கப்பட்ட மற்றும் அனுமதிப் பத்திரம் இல்லாத பஸ்களினால் இடம்பெறுகின்ற பாதிப்புகள் இனங்காணப்பட்டுள்ளன. இந்நிலையில், இவ்வாறு சட்டவிரோத போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் பெரும்பாலும் மாத்தளை கந்தேநுவர, இரத்தோட்டை, தம்புள்ளை, கலேவல, மாத்தளை - ஹல்கொல்ல போன்ற பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அநேகமான தனியார் போக்குவரத்து பஸ்களுக்கு வீதிப் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# யாழில் இன்னும் உணவுப் பொதிகளின் விலை குறையவில்லையென மக்கள் குற்றச்சாட்டு

எரிவாயுவின் விலை உயர்வைக் காரணம் காட்டி உணவுப் பண்டங்களின் விலைகளை உயர்த்திய யாழ். மாவட்ட உணவகங்கள், எரிவாயுவின் விலையை சுமார் 1,500 ரூபாவால் ஒரே மாதத்தில் குறைத்தபோதும் உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைக்காது விற்பனை செய்வதாகப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,யாழ். மாவட்டத்தில் அநேகமான உணவகங்கள் எரிவாயு விலையைக் காரணம் காட்டி உணவுப் பண்டங்களின் விலைகளை திடீர் திடீரென அதிகரித்தன.

மதிய சைவ உணவு ஒரு பொதி 600 ரூபா, அசைவ உணவு ஆகக் குறைந்தது 1,000 ரூபா, றோல்ஸ் ஒன்றின் விலை 100 ரூபா எனப் பல தின்பண்டங்களின் விலைகள் சடுதியாக அதிகரித்தன.எரிவாயு சிலிண்டர் ஒன்று 5 ஆயிரம் ரூபாக்கும் அதிகமாக விற்பனை செய்தபோது உணவகங்களில் விற்கப்பட்ட விலைகள் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்ட போது ஏன் குறையவில்லை என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல குளிர்பான நிலையங்களில் விற்கப்படும் றோல்ஸ் ஒன்று இன்னும் 100 ரூபாவாகவே விற்கப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது, திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள சில உணவகங்கள் காலை உணவுக்காக அனைவரும் விரும்பி உண்ணும் பரோட்டாவை சிறு அளவு மாற்றம் செய்து ஒரு ஜோடி அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆகவே, யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்குகின்ற மாவட்டப் பாவனையாளர் அதிகார சபை குறித்த விடயம் தொடர்பில் மக்கள் நலன் சார்ந்து செயற்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்டப் பாவனையாளர் அதிகார சபைக்கு தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு குறித்த விடயம் தொடர்பில் வினவியபோது, உணவுப் பண்டங்களை அதிகரித்த விலையில் விற்பனை செய்யும் உணவகங்கள் தொடர்பில் தமது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இருவேறு நிறுவனங்களை ஒன்றிணைக்கத் தீர்மானம்

## சதொச மறுசீரமைப்பு குறித்து அதன் தலைவர் தெரிவிப்பு



லங்கா சதொச மற்றும் சதொச ஆகிய நிறுவனங்கள் இரண்டுமே இருவேறு நிறுவனங்களாகும். லங்கா சதொச நிறுவனத்துக்கு கிடைக்கும் வருமானத்தினூடாகவே சதொச நிறுவனத்தின் செயற்பாடுகள், ஊழியர்களுக்கான கொடுப்பனவு என சகல விடயங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, இவற்றை இரு வேறு நிறுவனங்களாக முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக இரு நிறுவனங்களின் பொறுப்புகளையும் குறைத்து சொத்துகளை அதிகரித்து ஒருமித்த நிறுவனமாக மாற்றுவதனூடாக மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்கக்கூடியதாக இருக்கும். அத்துடன், சதொச நிறுவனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக்கவும் முடியும் என்று லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

சதொச நிறுவனத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கை குறித்து நேற்று (12) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சதொச நிறுவனத்தை மறுசீரமைப்பு செய்யும் விடயத்தை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் எடுக்காத பெறுமதி மிக்க தீர்மானமொன்றையே இந்த அரசாங்கம் எடுத்துள்ளது.

லங்கா சதொச மற்றும் சதொச ஆகிய நிறுவனங்கள் இரண்டுமே இரு நிறுவனங்களாகும். சதொச கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் கீழ் வரலாற்று ரீதியாக நடத்துப்பட்டு வந்த நிறுவனமாகும். இந்த நிறுவனம் 2001 ஆம் ஆண்டு மறுசீரமைப்பு செய்யப்பட்டு தனியார் மயப்படுத்தப்பட்டது. அந்த மறுசீரமைப்பு நடவடிக்கையின்போது அந்த நிறுவனத்திடமிருந்த சொத்துகள் மற்றும் 750 பணியாளர்களை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரசாங்க நிறுவனமாகவே இயங்கவேண்டுமென்று கோரியிருந்தார்கள்.

லங்கா சதொச என்பது 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட வியாபார நோக்கிலான நிறுவனமாகும். லங்கா சதொச நிறுவனமே தற்போது வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஆனால், சதொச நிறுவனத்திடம் சொத்துகள், மனித வளங்கள் இருந்தபோதும் அந்த நிறுவனம் வியாபாரத்தில் ஈடுபடுவதில்லை.

லங்கா சதொச நிறுவனம் வியாபாரத்தில் ஈடுபட்டு பெறும் வருமானத்தினூடாகவே, சதொச நிறுவனத்தின் செயற்பாடுகள், ஊழியர்களுக்கான கொடுப்பனவு, வாகனங்களின் பாவனை என்பன முன்னெடுக்கப்படுகின்றன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்விரு நிறுவனங்களையும் ஒன்றிணைத்து மறுசீரமைப்புக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவ்விரு நிறுவனங்களினதும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை முறையான வகையில் பெற்றுக்கொண்டு நாட்டுக்கு வினைத்திறனான வகையில் இவ்விரு நிறுவனங்களையும் மறுசீரமைப்பு செய்யவே அரசாங்கம் யோசனை முன்வைத்துள்ளது.

ஆனால், அரசாங்கத்தின் யோசனைகள் இதுவரையில் எங்களுக்கு கிடைக்கவில்லை. பொறுப்புகளைக் குறைத்து சொத்துகளை அதிகரித்து தொடர்ந்தும் லங்கா சதொச நிறுவனத்தின் விடயப்பொறுப்புகளை இணைத்து அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை, மக்களுக்கும் இலாபத்தைப் பெற்றுக்கொடுப்பதே இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையிலுள்ள முக்கிய அம்சமாகும்.

இருவேறு நிறுவனங்களாக முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக இரு நிறுவனங்களின் பொறுப்புகளுக்கு குறைத்து சொத்துகளை அதிகரித்து ஒருமித்த நிறுவனங்களாக மாற்றுவதற்கே நடவடிக்கை எடுப்பார்கள் என்றே நம்புகிறேன். எனவே, அதனூடாக சதொச நிறுவனத்துடன் இணைந்து லங்கா சதொசவின் சந்தைச் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுக்கக் கூடியதாக இருக்குமென மேலும் நம்புகிறோம் - என்றார்.





*கொழும்பு-14 கிரேண்ட்பாஸ் வடக்கு நவகம்புர புனித அந்தோனியார் ஆலயத்தின் 15ஆவது வருடாந்த திருவிழா திருச்சொருப பவனி அண்மையில் நடைபெற்றது. கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல உதவிப்பங்குத் தந்தை அருட்பணி கியான் நிலூசன், கிரேண்ட்பாஸ் புனித சூசையப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ஜூட்ராஜ் பெர்னாண்டோ அருட்பணியாளர்கள் மற்றும் நவகம்புர சர்வமதத் தலைவர்கள்,பிரமுகர்கள், அடியவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.*

படங்கள்: நசார்

# வடக்கு, கிழக்கு போராட்டக் களங்களாக மாற வேண்டும்

## ஈஸ்வரபாதம் சரவணபவன் வலியுறுத்து

ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டக் களங்களாக வடக்கு,கிழக்குப் பகுதிகளை மாற்றி தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவில், காணி சுவீகரிப்பிற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (12) மேற் கொள்ளப்பட்ட போராட்டத்தின் பின்னர் ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் திட்டத்தைத் தீட்டி அதன் நிகழ்ச்சி நிரலை ஒப்பேற்றிக்கொண்டு செல்கின்றது. அதிலும் தற்போது பிடித்து வைத்திக்கும் காணிகள் யாவும் வளம் நிறைந்த காணிகள்.

குறிப்பாக,பொன்னாலை மக்கள் குடிநீருக்காக பவுசர் மூலம் நீரைப் பெறுகையில் குடிதண்ணீர்க் கிணற்றை கடற்படை கையகப்படுத்தி வைத்துள்ளது.

எங்கெங்கு புதைகுழிகள் உள்ளனவோ அந்தந்த இடங்களை அடையாளப்படுத்தி தங்களுடைய புத்த கோயிலைக் கட்டுகின்றனர். இவை பற்றிய தகவல்கள் முற்கூட்டியே தெரிந்தும், அரசாங்கத்தில் வேலை செய்யும் தமிழ் அதிகாரிகளும் கூட கையறு நிலையிலேதான் உள்ளனர்.

இன்றும் தமிழ்ப் புலனாய்வாளர்கள் இங்குள்ளனர். அவர்களுக்கு நன்கு சிங்களம் தெரியும். ஆகவே, இவை பற்றி அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் எடுத்துக்கூற வேண்டும். வேறு நாடுகளிலெல்லாம் இவ்வாறான நிலைமைகள் இருந்தாலும், இங்கு எதிர்த்துக் கதைத்தால் வேலை பறிபோகும் நிலையுள்ளது.

சரத் வீரசேகர நீதித் துறையைத் தூக்கி எறிகின்றார். தமிழர்களின் பொருளாதாரத்தை வளர்க்கும் விடயங்களை இல்லாமல் செய்யும் நிகழ்ச்சி நிரலே காணப்படுகின்றது.

அதுவும் வடக்கு, கிழக்கில் சாதுரியமாக நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துள்ளனர். இதனால் நாங்களும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தாது விடின் தங்கள் நடவடிக்கைகளை இன்னும் சாதுரியமாக முன்னெடுப்பார்கள்.

வருகின்ற கிழமை கனேடியத் தூதுவர் இங்கு வரும் பொழுது அவர்களுக்கு இவ்விடங்களைக் காண்பிக்கும் தருணமே இது. சர்வதேச ரீதியாக இதனை எடுத்துச் செல்ல வழிகாட்டும்.

எனவே, ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி நிரல் தற்போதைக்கு முடிவடையாத நிலையிலுள்ளதால், வடக்கு, கிழக்கு பகுதிகள் போராட்டக் களங்களாக மாற்றப்பட்டு அங்கு தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.






*மஸ்கெலியா , சாமிமலை பகுதியிலுள்ள மாநெலி, கவரவில்லை, ஓல்ட்டன், பெயர்லோன் ஆகிய நான்கு தோட்டங்களைச் சேர்ந்த பார்வையற்றவர்களுக்கு அண்மையில் காலி லைன்ஸ் கிலப்பினால் மூக்குக் கண்ணாடிகள் வழங்கிவைக்கப்பட்டன.*

படங்கள்: மஸ்கெலியா நிருபர்

# ரோந்து சேவையைப் பலப்படுத்துக!

## பொலிஸாரிடம் வர்த்தகர்கள் கோரிக்கை

ஆ.ரமேஸ்

மலையக பிரதான நகர் பிரதேசங்களில் இரவு ஒன்பது மணிமுதல் அதிகாலை வரை பொலிஸ் ரோந்து சேவையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என நகர வர்த்தகர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலவாக்கலை நகரில் ஆறு கடைகளை உடைத்து கொள்ளையிட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே நேற்று (12) இந்தக் கோரிக்கையை வர்த்தகர்கள் முன்வைத்துள்ளனர்.

அத்துடன், கடந்த காலங்களில் நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் பிரதான நகரங்களில் உள்ள கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இருந்தபோதிலும் இந்தக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுப்பட்டவர்களில் எத்தனை பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர் என்பது தெரியாது எனவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், தலவாக்கலை நகரில் இடம்பெற்றுள்ள கொள்ளைச் சம்பவம் கண்டிக்கத்தக்கது. மேலும் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நகரில் பொலிஸார் ரோந்து சேவையில் இருந்தார்களா என்பது தொடர்பில் சந்தேகமாகவே உள்ளது. இது குறித்து நுவரெலியா பொலிஸ் தலைமையகம் விசாரணைகளை நடத்த வேண்டும் எனவும் வர்த்தகர்கள் கோரியுள்ளனர்.

எனவே, எதிர்காலத்தில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் பிரதான நகரங்களில் இடம்பெறாமல் தடுக்க பொலிஸாரின் இரவு நேர பாதுகாப்பு மற்றும் ரோந்து சேவையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்கள் தமது கோரிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# தேசிய சுற்றுலா கொள்கை உருவாக்குவது அவசியம்

## சஜித் சுட்டிக்காட்டு

தேசிய சுற்றுலா கொள்கையொன்று உருவாக்கப்படாமையே சுற்றுலாத் துறையில் நிலவும் பாரியதொரு பிரச்சினையாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தம்புள்ளை பிரதேச சுற்றுலாத்துறையுடன் தொடர்பான பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சி தலைவருக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (11) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்து தெரிவிக்கையில்,

நியமிக்கப்படும் அமைச்சினதும் மாறி மாறி நியமனமாகும் அமைச்சர்களது ஒரு சில பிரபலங்களுக்கும் அடிமைப்பட்ட துறையாக இது இருந்து வருகிறது. இதில் ஈடுபடும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோரை மறந்து, சிறியதொரு பலமிக்க குழுவினரை கோலோச்சும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனைத் தோற்கடிக்க நாம் தயார்.

சுற்றுலாக் கொள்கை உருவாக்கம் இடம்பெறும் கேந்திர நிலையங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் சுற்றுலாத் துறையில் ஈடுபடும் நபர்கள் இணைக்கப்பட்டு கொள்கை உருவாக்கும் செயல்முறைக்கு ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

பிரபல அரசியல் குடும்பத்துடன் தொடர்புடைய சிலர் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை மட்டுமே இலக்கு வைத்து தங்கள் சொந்த நலனுக்காக இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் இது சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ள சாமானிய மக்களுக்கு பெரும் பாரபட்சத்தை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டினார்.

# பஸ்ஸில் போதைப்பொருள் கடத்திய இருவர் கைது

அநுராதபுரம் நிருபர்

மதவாச்சி, பூனேவ பகுதியில் மேற் கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, 08 கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சா போதைப் பொருளை பஸ்ஸில் கடத்திச்சென்ற சந்தேக நபர்கள் இருவர் பூனேவ பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பூனேவ நகரில் நேற்று முன்தினம் (11) பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

விஸ்வமடு மற்றும் ஹினிதும ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 32 மற்றும் 36வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பூனேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் மதவாச்சி நீதிமன்றில் ஆஜர்ப்படுத் தப்படவுள்ளனர்.

# கண்டியில் நீர்வெட்டு

பேருவளை நிருபர்

பொல்கொல்ல நீர் வழங்கல் திட்டத்தின் நயாவல பாலத்திற்கருகில் அத்தியா வசிய விஸ்தரிப்பு வேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளதால் இன்று (13) முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையில் 6 மணித்தியால நீர்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுமென்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் உடதலவின்ன, பல்லெதலவின்ன, சரசவி மாவத்தை, பொல்கொல்ல, நவயாலதென்ன மற்றும் ஜம்புகஹபிட்டிய ஆகிய பகுதிகளில் நீர் விநியோகத்தடை விதிக்கப்படும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேலும் அறிவித்துள்ளது.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியுமென்றும் சபை சுட்டிக்காட்டியுள்ளது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.07.11

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5172
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,273,396.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 8 7 9 2 3 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3414
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,999,614.80
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 01 19 24 80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1202
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,303,933.60
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 35 40 63 73
விசேட எழுத்து L

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 481
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,151,899.00
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 04 32 35 58
விசேட இலக்கினம் ரிஷபம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1520
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,678,488.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 10 25 37 44
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# சக்திமிக்க பொருளாதாரக் கோட்பாட்டை 2027 இல் 3 சதவீதத்தால் உயர்த்தத் திட்டம்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் தெரிவிப்பு

கண்டி நிருபர்

இன்று சக்தி மிக்கதொரு பொருளாதாரக் கோட்பாடு பின்பற்றப்படுகிறது. இது 2027 வரை நீடிக்கும். அதன்படி 2027 இல் 3 சதவீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த நாம் திட்டமிட்டுள்ளோம் என்று நிதித்துறை இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலக் கேட்போர் கூடத்தில் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாடு பொருளாதாரத்துறையில் ஒரு ஸ்திரத்தன்மையை நோக்கி முன்னேறுகின்றது. எனவே, தற்போது பின்பற்றப்படும் பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகள் எதிர்வரும் 2027 வரை நீடிக்கும். இது தொடர்பாக சர்வதேச நாணய கிடைக்கும். நாம் 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியில் சிக்கியபோது இந்தியா, பாரிஸ் ஒத்துழைப்பு நாடுகள் மற்றும் சீனா என்பன உதவி செய்ய முன்வந்தன. முதலாவது தவணைக்கான முன்னேற்றம் பற்றி நாம் அறிக்கையிட எமது உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மிகவும் அவசியம்.

அஸ்வெசும என்ற பொதுமக்கள் உதவித்திட்டத் திற்கு 9 இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட



இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி செயலகத் தினால் அரசின் புதிய வரிக்கொள்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டத் தொடரை நாடளாவிய ரீதியில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இதற்கான இரண்டாவது கூட்டம் கண்டியில் இடம்பெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாண அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், வர்த்தக சமூகம், பல்கலைக்கழக அதிகாரிகள், தொழில் துறை விற்பன்னர்கள் நிதியம் பலவந்தமாக எதனையும் நாட்டுக்குத் திணிக்கவில்லை. 190 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பே சர்வதேச நாணய நிதியம். அதன் ஒத்துழைப்பைப் பெறாது நாம் மட்டும் தனித்து நின்றால் எந்த நாட்டின் உதவியும் எமக்குக் கிடைக்காது. ஏதேனும் ஒரு நாடு அதன் உதவியை நாடினால் மட்டுமே கொள்கை விதிப்புகளை மேற்கொள்ளும்.

அதேநேரம், கட்டம் கட்டமாகவே அவர்களது நிதியுதவிகள் கிடைக்கின்றன. முதலாவது தவணைக்கான கடன் தற்போது கிடைத்துள்ளது. அதன் முன்னேற்றம் பற்றிய அறிக்கை சமர்பிக்கப்பட்ட பின்பே இரண்டாம் கட்ட உதவி மேன் முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்டவை ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களாகும். அவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பிரிவை (கெட்டகறியை) மாற்றியமைக்கவே மேன் முறையீடு செய்துள்ளனர். அதாவது, 4,500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை 15,000 ரூபாவாக வழங்கும் பிரிவில் தம்மை இணைக்கும் படியான மேன் முறையீடுகளே அவை – என்றார்.



சேர்ச் ஒப் கொமன், பதுளை மாவட்ட பெண்கள் அமைப்பு ஆகியன இணைந்து பதுளை ரிவர்சைட் விடுதியில் புதன்கிழமை (12) நடத்திய பதுளை மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் மற்றும் பெண் சமூக மேம்பாட்டாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிச் செயலமர்வையும் வளவாளர்கள் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். படம் (பதுளை நிருபர் )

# சட்டவிரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்ட இளைஞர்கள் ஐவர் கைது

மஸ்கெலியா நிருபர்

பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைக் கப்பெற்ற இரகசியத் தகவல்களைத் தொடர்ந்து பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்புரைக்கமைய பொகவந்தலாவ பொலிஸார் பெற்றசோ தோட்டத்தில் சுற்றிவளைப்பொன்றை மேற் கொண்டனர். இதன்போது அதே தோட்டத்தைச் சேர்ந்த 25 முதல் 35 வயதுடைய ஐந்து இளைஞர்கள் மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை அகழ்விற்கு ஈடுபடுத்தப்படும் உபகரணங்களுடன் கைதுசெய் யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

புதன்கிழமை சந்தேக நபர்கள் ஐவரையும் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சிவனொளிபாத மலைப் பாதை விகாரையில் குளவிக்கூடுகள்



கண்டி நிருபர்

ஸ்ரீபாத மலை செல்லும் பாதையிலுள்ள விகாரையில் குளவிக்கூடுகள் காணப்படுகின்றன. நல்ல தண்ணீர் நகரிலிருந்து சிவனடிபாத மலைக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள நாகதீப பௌத்த விகாரையை குளவிகள் ஆக்கரமித்துள்ளதால் யாத்திரிகர்கள் பாதிப்படையலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

அவ் விகாரையில் உள்ள சுமார் நாற்பது அடி உயர புத்தர் சிலையின் கூண்டில் பல பகுதிகளில் குளவிக்கூடுகள் உள்ளன.

எனவே, இது விடயமாக மிக அவதானம் தேவை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# ‘களவாடப்பட்ட தலைமுறைகளின் கதை’ நேரு கருணாகரனின் நூல் ஹட்டனில் வெளியீடு

சட்டத்தரணி நேரு கருணாகரன் தினக்குரல் 2012-2015 வரையான காலப்பகுதிக்குள் எழுதிய வாரம் ஒரு சினிமா பகுதியில் வெளிவந்த உலக சினிமா திரைப்படங்களை பற்றிய கட்டுரைகளில் 32 கட்டுரைகள் ‘களவாடப்பட்ட தலைமுறைகளின் கதை’ எனும் நூல் வெளியீடு ஹட்டனில் இடம்பெறவுள்ளது.

காட்சி மொழி பதிப்பகத்தால் நூலுருவாக்கம் பெற்றுள்ள இந்நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு ஹட்டன் நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வரவேற்புரை, தலைமையுரையையடுத்து நூல் அறிமுகவுரையை தனராஜ் கஜேந்திரகுமார் (ஆணையாளர், பண்டாரவளை மாநகர சபை) வழங்கவுள்ளார்.

வே.தினகரன் (அதிபர்- சென்கிளையர் தமிழ் மகா வித்தியாலயம்) , சு. விஜயகுமார் (சட்டத்தரணி- காவத்தை, இரத்தினபுரி) ,





எட்டியாந்தோட்டை கருணாகரன் (அதிபர்- கந்தோலாயா தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

ஜோதிராஜ் ஜெகன் தொகுத்து வழங்கவுள்ள இந்நிகழ்வு ஏற்புரை, நன்றியுரையுடன் நிறைவடையும். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# இலங்கை மாணவர்களுக்கு இந்திய உதவித் தூதரக புலமைப்பரிசில் வழங்கிவைப்பு

கண்டி நிருபர்

இந்திய உதவித் தூதரகத்தின் ஆதரவில் இலங்கையைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு இந்திய அரசு புலமைப்பரிசில்களை செவ்வாய்க் கிழமை வழங்கி வைத்தது.

இதில் 9 பேர் கண்டி உதவி இந்தியத் தூதுவ ராலயத்தின் அனுசரணையுடன் இந்தியா செல்லவுள்ளனர். ஆக்ராவில் உள்ள ஹிந்தி சங்ஸ்தான் மத்திய நிலையத்தில் இவர்கள் தமது இந்தி மொழி தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொள்ளவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிக்காலத்தின்போது உணவு, தங்குமிட வசதி உட்பட மேலும் பல வசதிகளையும் இந்திய



அரசு வழங்கவுள்ளது.

கண்டி உதவி இந்தியத் தூதுவர் டாக்டர் எஸ். ஆதிரா புமைப்பரிசிலுக்குத் தெரிவான ஒரு மாண விக்கு ஆவணங்களைக் கையளித்தார். ஏனைய மாணவ மாணவிகளும் இதில் கலந்துகொண்டனர்.

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவனின் தற்கொலை முயற்சிக்கு அரச கெடுபிடிகளே காரணமாக இருக்கலாம்

## குற்றஞ்சாட்டுகிறது மாணவர் சங்கம்

கண்டி நிருபர்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார வைத்திய பீட மாணவர் ஒருவர் தற்கொலை செய்ய முயற்சித்து காப்பாற்றப்பட்டார். இச்சம்பவத்தில் அரசின் சில கெடுபி டிகளே காரணமென மேற்படி பீடத்தின் மாணவர் சங்கச் செயலாளர் டில்சான் சோமரத்ன குற்றஞ்சாட்டினார்.

பேராதனைப் பல்கலைக்கழக இணைந்த சுகாதார வைத்திய பீடத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

மேற்படி பீடத்தின் இரண்டாம் வருட மாணவன் ஒருவர் கடந்த வாரம் பல்கலைக்கழக விடுதியில் வைத்து தற்கொலை முயற்சியில் ஈடுபடும்போது காப்பாற்றப்பட்டுள்ளார். மேற்படி மாணவனிடம் பகிடி வதை தொடர்பாக வாக்கு மூலம் பெற வந்த பொலிஸார் மாணவனிடம் கடுமையாக நடந்துகொண்டதுடன் அம்மாணவனை துப்பாக்கி முனையிலும் பயமுறுத்தியுள்ளனர்.

அதுமட்டுமன்றி, குறித்த மாணவனுக்கு தாக்குதலும் மேறகொள்ளப்பட்டுள்ளது. இவை யாவும் பல்லைக்கழக வளவிலேயே இடம்பெற்றுள்ளன. .

இதன் காரணமாக அம்மாணவன் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்ததாகவும் இது தொடர்பாக தமது அமைப்பு நிர்வாகத்திற்கும் பாதுகாப்புத் தரப்பிற்கும் முறைப்பாடு செய்ததாகவும் தெரிவித்தார்.

எனவே, இது தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் மாணவர்களது மன நிலை பாதிக்கும் படியான வகையில் நடந்துகொள்ளாதிருக்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

# ஹெரோயின் கொண்டுசென்ற குடும்பஸ்தருக்கு ஆறு வருடங்களின் பின் மரணதண்டனை

## வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

வவுனியா நிருபர்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி விற்பனைக்காக ஒரு கிலோ 135 கிராம் தூய்மையான ஹெரோயின் போதைப்பொருளை கொண்டுசென்ற குடும்பஸ்தருக்கு 6 வருடங்களின் பின் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

கடந்த 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் திகதி வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தலைமையில் பொலிஸார், அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்களை சோதனையிட்டனர்.

இதன்போது பஸ் ஒன்றில் பயணித்த குடும்பஸ்தர் தன்வசம் உடைமையில் வைத்திருந்த பை ஒன்றிலிருந்து ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த குடும்பஸ்தரும் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் ஒரு கிலோ 135 கிராம் நிறையுடையது என்பதுடன், கலப்படம் அற்ற தூய ஹெரோயின் என்பதும் பொலிஸ் விசாரணை மற்றும் சோதனைகளில் தெரியவந்தது.

இதனையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று விளக்கமறியலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஒரு கிலோ 135 கிராம் தூய ஹெரோயினை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைக்காக கொண்டுசென்றமை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டு, அரச சட்டத்தரணிகளான தர்சிகா திருக்குமாரன் மற்றும் ஆறுமுகம் தனுஜன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இவ்வழக்கு விசாரணைகளில் குறித்த நபர் ஒரு கிலோ 135 கிராம் தூய ஹெரோயினை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைக்காக எடுத்துச் சென்றமை என்பன எந்தவித சந்தேகத்திற்குமிடமின்றி உறுதிப்படுத்தப்பட்டமையால் குறித்த நபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரணதண்டனை வழங்கி புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

யாழ். நாவற்குழியைச் சேர்ந்தவரும், தற்போது வவுனியாவில் வசித்து வருபவருமான கந்தையா தியாகராஜா என்ற 55 வயது குடும்பஸ்தருக்கே 6 வருடங்களின் பின் இவ்வாறு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னார் வர்த்தகர்களுக்கு போதிய அறிவில்லை: பாவனையாளர் அபிவிருத்தி அதிகாரசபை விளக்கம்!

மன்னார் நகர் நிருபர்

மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஊழல் மற்றும் இலஞ்ச செயற்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு இவ்வாரம் மன்னார் பாவனையாளர் அபிவி ருத்தி அதிகாரசபை தொடர்பிலான செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்த நிலையில், மன் னார் மாவட்ட அரசாங்க அதிபர், மன்னார் பாவ னையாளர் அலுவல்கள் அதிகாரசபையினரிடம் குறித்த செய்தி தொடர்பில் விளக்கம் கோரியி ருந்தார்.

இந்நிலையில், மன்னார் பாவனையாளர் அபிவிருத்தி அதிகாரசபையினர் வழங்கிய விளக்கத்தின் பிரகாரம், தாங்கள் மிகவும் சிறப்பாகவும் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி நடப்பதாகவும் தங்களது தலைமை அலுவல கத்தால் வழங்கப்படும் target அதிகமாக இருப்பதனாலே குறுகிய காலத்தில் மீண்டும்

පාරිභෝගික කටයුතු පිළිබඳ අධිකාරිය
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
CONSUMER AFFAIRS AUTHORITY

மீண்டும் வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

வியாபார நிலைய உரிமையாளர்கள் தமது அலுவலகங்களுக்கு வருகை தந்து வழக்கிலிருந்து தங்களையும், சான்றுப் பொருட்களையும் விடுவிக் குமாறு கோருவதாகவும் வழக்கு பெயர்கள், திகதிகளை மாற்றித் தருமாறு கேட்பதாகவும் தாங்கள் நேர்மையாக இருப்பதன் காரணமாக அதை மறுப்பதால் வர்த்தகர்கள் தங்கள் மீது திட்டமிட்டு விமர்சனங்களை முன்வைப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், மன்னார் மாவட்ட வர்த்தகர்களுக்கு மன்னார் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை சட்டநடவடிக்கை மற்றும் செயற்பா டுகள் தொடர்பாக போதிய அறிவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, அது தொடர்பில் தங்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை யின்படி, மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் உண்மையில் பாதிப்படைந்த அல்லது அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளவர்கள் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு நேரடியாகவோ எழுத்து மூலமாகவோ தகவல் வழங்குமாறும் அவ்வாறு உண்மையான தகவல் வழங்கும் பட்சத்தில் உரிய விசாரணைகளின் பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரியப்படுத்தியுள்ளார்.

# கூட்டுறவாளர் கயிலைநாதனுக்கு தென்மராட்சியில் கௌரவிப்பு

சாவகச்சேரி நிருபர்

சர்வதேச கூட்டுறவு தினத்தின் 101ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நாடு முழுவதும் சைக்கிளில் வலம் வந்த கூட்டுறவாளர் வை.கயிலைநாதனை தென்மராட்சி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தனங்கிளப்பு பகுதியில் வைத்து கௌரவித்திருந்தன.

கூட்டுறவின் மகத்துவம், கொள்கை மற்றும் சேவை ஆகியவற்றைத் தெளிவுபடுத்தும் முகமாக ஓய்வுபெற்ற மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர் வை.கயிலைநாதன் தனது 68ஆவது வயதில் 01/07 அன்று யாழ். மாவட்டத்தில் தனது பயணத்தை ஆரம்பித்திருந்தார்.

இந்நிலையில், அவர் தனது பயணத்தை முடித்து நேற்று (12) புதன்கிழமை பூநகரி



ஊடாக தென்மராட்சிப் பகுதிக்கு வந்த வேளையில் தனங்கிளப்பு பகுதியில் வைத்து சாவகச்சேரி மற்றும் தென்மராட்சி கிழக்கு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு ஒழிப்பு சேவை அதிகாரிகளை நிரந்தரமாக்க வேண்டியது அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



டெங்கு ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் சேவையை நிரந்தரமாக்க சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல விருப்பம் தெரிவித்த போதிலும், அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இதேபோன்ற அமைச்சரவைப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு அதிகாரிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் புதிய வேலைவாய்ப்புகளை வழங்குவது கடினமென்றாலும், இவர்கள் 7 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் டெங்கு ஒழிப்புக்கு 22,000 ரூபா உதவித்தொகையுடன் பணிக்கமர்த்தப்பட்ட அரச ஊழியர்கள் என்பதனால், 180 நாள் சேவை நாட்களுக்குள் இவர்களுக்கு நிரந்தரமாக்கலை மேற்கொள்ள வேண்டும். ஆனால், அது அமுல்படுத்தப்படவில்லை.

இதனால் 1,105 அதிகாரிகளைக் கைவிடும் நிலைக்கு நிலைமை மாறியுள்ளது. இந்த அதிகாரிகளின் உரிமைகளுக்காக நாம் போராடத் தயாராகவே இருக்கிறோம்.

தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்தபோது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இந்த அதிகாரிகளை- அரசியல் பழிவாங்கலுக்கு ஆளாகிய இத்தரப்புக்கு நியாயத்தை வழங்க தற்போதைய ஜனாதிபதியாலோ அல்லது அரசாங்கத்தாலோ இதற்கான தீர்வு வழங்க முடியாவிட்டால் எதிர்காலத்தில் உதயமாகும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் குறித்த நியமனங்களை நிரந்தரமாக்குவோம் - என்று குறிப்பிட்டார்.

# நல்லிணக்க பணிகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவருவதே ஜனாதிபதியின் நோக்கம்



## செயலாளர் சமன் ஏக்கநாயக்க எடுத்துரைப்பு

இலங்கையில் நல்லிணக்கத்தை உருவாக்கும் பணிகளை அடுத்த தலைமுறைக்கு கையளிக்காமல், தற்காலத்திலேயே அதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமாகும் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும், அந்தப் பிரச்சினைகள் நிவர்த்திக்கப்படும் பட்சத்தில் வருடம் ஒரு முறை ஜெனீவாவில் சாட்சிக் கூண்டில் நிற்கவேண்டிய அவசியம் இருக்காதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை பற்றி சிவில் சமூகத்தைத் தெளிவூட்டும் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதியின் செயலாளர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் நோக்கத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெளிவுபடுத்தியதோடு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் பற்றியும் வெகுவாக ஆராயப்பட்டது.

பின்னர் ஆணைக்குழுவின் நோக்கத்தை அடைவதற்கு சிவில் சமூகத்தின் நிலைப்பாடுகளைக் கேட்டறிந்த ஜனாதிபதியின்செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நல்லிணக்கச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க சகலரும் ஒத்துழைப்புகளை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்வதற்கு அனைத்து பிரஜைகளினதும் பங்களிப்பு மிக அவசியமானதென ஜனாதிபதியின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

# போதை மாத்திரைகளுடன் நபரொருவர் கைது

ரத்தொழுவ குடியிருப்புத் தொகுதியில் கொக்கெய்ன் மற்றும் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து 26 கிராம் கொக்கெய்ன் மற்றும் சுமார் 2,250 போதை மாத்திரைகள் கைப்பற்றப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு , எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கை- ஈரான் சிறுவர் நட்புறவு வாரம் ஆரம்பம்





ஈரான் கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் இலங்கை- ஈரான் சிறுவர் நற்புறவு வாரம் நேற்று (12) கொழும்பு பொது நூலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.இந்நிகழ்வை கொழும்பு பொது நூலகத்தின் ஆதரவுடன் ஈரான் கலாசார நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

ஈரான் கலாசார கவுன்சிலர் கலாநிதி பஹ்மன் முஅஸ்ஸாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாக அமைச்சர் விதுர விக்ரமநாயக்க கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கொழும்பு பொது நூலகத்தின் பிரதம நூலகர் திருமதி வருனி கங்காபட ஆராச்சி, நூலக முக்கியஸ்தர்கள், ஈரான் கலாசார நிலைய அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கொழும்பு மாவட்டத்திலுள்ள ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் நூறு மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். இம்மாணவர்களுக்கு ஈரானிலிருந்து வருகை தந்துள்ள நடமாடும் சர்வதேச அருங்காட்சியகத் தூதுவர்கள் பயிற்சிகளை வழங்கினர்.

குறிப்பாக, கைவினைப் பொருட்கள், சித்திரம் வரைதல், மொழி இலக்கணம், நாடகம் என்பவற்றுடன் சிறார்களுக்கான திரைப்படக் கண்காட்சி மற்றும் அவர்களுக்கான பயிற்சிப்பட்டறை என்பன இடம்பெற்றன. இன்று ஆரம்பித்த சிறுவர் நட்புறவு வாரம் தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் நடைபெற்று எதிர்வரும் சனிக்கிழமை முடிவடையும்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் மாணவர்களின் கைவினைப் பொருட்களைப் பார்வையிட்டதுடன் மாணவர்களுடனும் உரையாடினார்.

மேலும் பொது நூலகத்திலுள்ள ஈரான் நூலகப் பிரிவையும் பார்வையிட்டனர். எதிர்வரும் சனிக்கிழமை வரை பொதுமக்கள் தமது சிறார்களை அழைத்துச் சென்று இதனைப் பார்வையிடமுடியும்.

# வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கு கிடைக்கவேண்டிய பணம் நிறுத்தம்!

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டு

மீனவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக பல்வேறு நிறுவனங்களிடம் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்த போதிலும், அண்மையில் ஒரு நிறுவனம் வடமராட்சி வடக்கு பகுதியில் கடற்கரையில் படகு கட்டும் துறைகளை மேம்படுத்துவதற்காக சுமார் ஒரு கோடி நிதியை வழங்க முன்வந்தது. யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் ஒழுங்கற்றிருந்ததனால் அப்பணத்தைப் பெற்று மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவருமான நா.வர்ணகுலசிங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி ஊடக மையத்தில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் நிறுவனம் ஒன்றுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் வடமராட்சியிலுள்ள 25 வேன்கள் பராமரிப்புக்காக குறித்த நிதி கிடைக்க இருந்தது. வடமராட்சி வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட 14 சங்கங்களும் அது தொடர்பாக கடிதம் மூலம் கோரிக்கை முன்வைத்த நிலையிலேயே குறித்த நிதி கிடைக்க இருந்ததாகவும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திலிருந்து தாம் எவ்விதமான முன்னறிவுப்புகளோ அல்லது குற்றச்சாட்டுக் களோ இன்றி நீக்கப்பட்டோம்.

தற்போது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தை தற்போது ஒரு கட்சி தம்வசம் வைத்திருப்பதாகவும், குறித்த விடயம் தொடர்பில் எமக்கு உதவி வழங்கவிருந்த நிறுவனத்திற்கு நான் குறிப்பிட்டிருந்தேன்.

தற்போது கட்சி சமாசம் நடாத்துவதால் சமாசம் ஊடாக எம்மால் கடிதம் தரமுடியாது. எமது 14 சங்கங்களும் இணைந்து கடிதம் தருகின்றோம் எனத் தெரிவித்த போது உங்களுக்கு மேலுள்ள அமைப்பு ஒரு கட்சிக்கு கீழ் இயங்குவதால் எமக்கு பல சிக்கல்கள் ஏற்படும். அதனால் அந்த நிறுவனம் எமக்கு உதவுவதை நிறுத்தி மட்டக்களப்புக்குச் சென்றுள்ளது.

இன்று எமக்காக ஒதுக்கப்பட்ட ஒன்றரைக் கோடி ரூபா மட்டக்களப்புக்கு மாற்றப்படவுள்ளது. இவ்வாறு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மேலும் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இந்தியாவில் தமிழ்நாடு உயர் நீதிமன்றில் கச்சதீவை மீளப் பெறப்பட வேண்டும் என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது கச்சதீவு தமிழ்நாடு வசமானால் நாம் இங்கு எந்தவிதமான தொழிலையும் செய்யமுடியாது. இதனால் நாம் ஒருபோதும் கச்சைதீவை வழங்க முடியாது - என்றார்.

# கல்வி விருத்தியே மலையக மக்களின் மாற்றத்துக்குத் தேவை!

## மதுபான விற்பனை நிலையங்கள் அல்லவென்கிறார் வடிவேல் சுரேஷ்

ஆ.ரமேஸ்

மலையக மக்களின் மாற்றத்துக்கு கல்வித்துறையே விருத்தியடைய வேண்டும். மாறாக, மதுபான விற்பனை நிலையங்கள் அல்ல - என பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

மலையகத்தில் புதிதாக முளைத்துவரும் புதிய மதுபான விற்பனை நிலையங்களின் வேர்களைப் பிடுங்க பாராளுமன்றத்துக்குள்ளும், வெளியே மக்களுடனும் இறங்கிப் போராடுவேன் எனவும் எச்சரித்துள்ளார். மலையகத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபான சாலைகள் குறித்து நேற்று முன்தினம் (11) அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மலையகத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழும் இடங்களை இலக்காகக் கொண்டு இயங்கும் மதுபான சாலைகளுக்கு அப்பால் புதிய மதுபான சாலைகள் பல அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அதனடிப்படையில் டயகம நகரில் புதிய மதுபானசாலையொன்று அமைக்கப்படவுள்ள நிலையில், அதற்கு எதிராக டயகம பிரதேச இளைஞர்கள்,பாடசாலை மாணவர்கள்,சமய குருக்கள்மார் உட்பட பொதுமக்கள் போராடி வருகின்றனர்.

இது குறித்து இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பிரதேச மக்கள் எனது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

இந்த நிலையில், பிரதேச மக்களின் கோரிக்கை நியாயமானது.காரணம், மலையகத்துக்கு இன்று மதுபான சாலைகள் முக்கியமல்ல. மாறாக, பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களில் மாற்றத்தை ஏற்படுத்த கல்வித்துறையையே அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

நாட்டில் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மலையகப் பெருந்தோட்டங்களில் உழைத்து வாழும் எமது உறவுகள் தங்களது குடும்ப வாழ்க்கையை நாளாந்தம் நகர்த்திச் செல்ல அரும்பாடு பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், மலையகத்தில் உழைக்கும் மக்கள் வியர்வை சிந்தி சம்பாதிக்கும் பணத்தை மதுவுக்கு செலவுசெய்து மதுப் பாவனைக்கு மக்களை ஊக்கப்படுத்தும் வகையில் புதிய மதுபானசாலைகள் அமைக்க மலையகத்தில் அரங்கேறிவரும் செயற்பாடுகளுக்கு நான் இடம் கொடுக்க மாட்டேன்.



எனவே, புதிய மதுபானசாலைகள் மலையக மக்களுக்கு தேவையில்லை என எதிர்த்து நிற்கும் இந்த நியாயமான மக்கள் கோரிக்கையை ஏற்று நான் மக்களோடு மக்களாக இறங்கிப் போராடத் தயாராக உள்ளேன்.

மலையகத்தில் புதிதாக முளைத்து வரும் புதிய மதுபான விற்பனை நிலையங்களின் வேர்களைப் பிடுங்க பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியே உள்ள மக்களுடனும் இறங்கிப் போராடுவேன் எனவும் எச்சரிப்பதாகத் தெரிவித்தார்.



தர்கா நகர் இப்றாஹீமிய்யா ஷாதுலிய்யா ஸாவியாவில் வருடாந்த ஷாதுலிய்யா மனாகிப் தமாம் கந்தூரி மஜ்லிஸ் மௌலவி முகத்தமுஷ் ஷாதுலி மபாஸ் ஹுஸைன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி அப்துஸ் ஸலாம் (பலாஹி) விஷேட பேச்சாளராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். கலீபதுஷ் ஷாதுலி மௌலவி முஹம்மத் பைரூஸ் (பஹ்ஜி) தலைமையில் ஹழரா மஜ்லிஸ் இடம்பெற்றதோடு கந்தூரி கமிட்டி உருப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உருப்பினருமான எம்.எஸ்.எம் அஸ்லம் ஹாஜியார் நன்றியுரை நிகழ்த்தினார்.

படங்கள்: பீ.எம் முக்தார்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (12.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 204.9170 | 217.4233 |
| கனேடியன் டொலர் | 230.5402 | 244.3487 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.3619 | 45.1803 |
| யூரோ | 337.0110 | 355.0798 |
| ஜப்பான் யென் | 2.1885 | 2.3048 |
| சிங்கப்பூர் டொலர் | 227.9132 | 240.8733 |
| ஸ்ரேலிங் பவுன் | 396.5362 | 416.5925 |
| சுவிஸ் பிராங் | 346.2119 | 367.7993 |
| ஐ.அ. டொலர் | 306.1518 | 320.6817 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 832.6611 |
| குவைட் | குவைட் தினார் | 1,023.0247 |
| ஓமான் | ஓமான் றியால் | 815.3692 |
| கட்டார் | கட்டார் றியால் | 86.1193 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 83.6857 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 85.4651 |

# சட்டத்தை உதாசீனம் செய்யும் சாரதிகளால் காவு கொள்ளப்படுகிறது மனித உயிர்கள்

## வேதனைக்குரிய விடயமென்கிறார் இரா.துரைரெத்தினம்

எருவில் செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டத்தை மதிக்காத வாகன சாரதிகளின் கவனயீனத்தினால் விபத்துகள் இடம்பெற்று அப்பாவி மனித உயிர்கள் தொடர்ச்சியாக காவு கொள்ளப்படுகின்றன. இது வேதனைக்குரிய விடயமாகும் என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மன்னம்பிட்டியில் இடம்பெற்ற கோர விபத்தில் காயமடைந்தவர்களுக்கும் உயிரிழந்த அப்பாவிகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போக்குவரத்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட சாரதிகளை ஊக்குவிப்பதோடு சட்டத்தையும் ஒழுங்கு விதிமுறைகளையும் மதிக்காமல் துஷ்பிரயோகம் செய்யும் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அன்றாட வாழ்வாதார தேவைப்பாட்டின் நிமித்தம் பிரயாணிகள் இரவு நேரங்களில் பயணம் மேற்கொள்ளும் போது உயிரை கையில் பிடித்த நிலையில் அச்சத்துடனும் பதற்றத்துடனும் பிரயாணம் செய்கின்றார்கள்.

இந்நிலையை மாற்றியமைத்து பிரயாணிகள் அச்சமின்றி செல்வதற்கான ஒழுங்குகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டும். இதேவேளை தம்மை நம்பி பயணிக்கும் மக்களை பாதுகாக்க சாரதிகளும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இம்மாவட்டத்தில் நேர்மையோடு பணியாற்றும் சட்டத்தை மதிக்கும் சாரதிகளும் நடத்துநர்களும் பலர் இருக்கின்ற வேளையில் ஒருசிலரின் செயற்பாடுகள் காரணமாக பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. சட்டத்தை மதித்து கடமையாற்றும் சாரதிகளை நாம் மதிப்பதோடு அவர்களை நாம் கௌரவப்படுத்துகின்றோம். இதற்கு மாறான முறையில் ஒப்படைக்கப்பட்ட பணியை துஷ்பிரயோகம் செய்யும் சாரதிகளையும் நடத்துநர்களையும் கண்டிப்பதோடு அவர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனகர் கிராம மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை



அட்டப்பள்ளம் செய்தியாளர்

1987ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இராணுவத்தினரால் அம்பாறை,கனகர் கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களை ஜனாதிபதியின் வழிகாட்டலில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கையை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க குறித்த காணியை துப்புரவு செய்யும் பணியை பாராளுமன்ற உறுப்பினர் கலையரசனின் கோரிக்கையின் பேரில் உள்ளூராட்சி அமைப்புகள் முன்னெடுத்துள்ளன.

# கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவில் சௌபாக்கியா வீட்டு திட்டம் ஆரம்பம்

பாறுக் ஷிஹான்



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின் கீழ் கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று (12) மருதமுனை-04 ஆம் பிரிவில் இடம்பெற்றது.கல்முனை சமுர்த்தி வங்கிச் சங்க சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் என்.எம் நௌசாத்தின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம் சாலிஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.எஸ்.பரீறா ,வலய உதவி முகாமையாளர் பி.எம் இஸ்ஹாக் , பிரிவுக்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர்.முகர்ரமா என பலர் கலந்து கொண்டனர்.

# மட்டு.வில் "ஈஸ்டன் எக்ஸ்போ" கல்விக் கண்காட்சி

நிந்தவூர் செய்தியாளர்

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினதும் வலய கல்வி அலுவலகங்களினதும் அனுசரணையில் எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு, கல்லடி, சன்ஸைன் சுற்றுலா விடுதியில் Education Srilanka-2023 Eastern expo உயர்கல்வி கண்காட்சி இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்தில் உயர்கல்வியைத் தொடரவுள்ள மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் கலந்து பயன்பெறுமாறு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.கனகசூரியம் தெரிவித்துள்ளார்.

க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடையாத, சித்தியடைந்த, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பித்த மற்றும் உயர்கல்வியைத் தொடரவுள்ள சகல மாணவர்களுக்கும் தமது கல்வி தரத்தை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல் ஆலோசனைகள் இதன்போது வழங்கப்படவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஜனாதிபதி சுற்றாடல் விருது பெற்ற சம்மாந்துறை வைத்தியசாலைக்கு பாராட்டு



நூருல் ஹுதா உமர்

சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற வைத்தியசாலைகளுக்கிடையிலான பொலித்தீன் பாவனையை இல்லாமல் செய்து, சுற்றுச்சூழலை அழகுற வைத்திருந்தமை மற்றும் சுற்றுச்சூழல் பசுமை நடவடிக்கைகளை பராமரித்து வீண்விரயத்தை குறைத்தமை போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்காக "ஜனாதிபதி சுற்றாடல் விருது" பெற்ற சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையை பாராட்டி கௌர விக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது விபத்துக்கள் மற்றும் காயங்களை சிறப்பாக பராமரித்தமைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களும் பணிப்பாளரினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆசாத் ஹனிபா, திட்டமிடல் வைத்தியர் ஏ.ஆர். அஹமட் நியாஸ், பணிமனை சார்பில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.ஏ. வாஜித் மற்றும் பிரிவுத் தலைவர்கள்,ஏனைய உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# சமுர்த்தி சௌபாக்கியா வீடமைப்புத்திட்டம் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வீடுகள்



அட்டாளைச்சேனை செய்தியாளர்

நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவில் வருமானம் குறைந்த குடும்பத்தவர்களுக்கு சமுர்த்தி சௌபாக்கியா வீடமைப்புத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகளை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம்(11) தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி. அன்வரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் நிந்தவூர் 23 ஆம் பிரிவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வீடுகளை பயனாளிகளிடம் சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி மூலம் நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று புதிய வீடுகள் இதன்போது பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியைக் கொண்டும் பயனாளிகளின் பங்களிப்பைக் கொண்டும் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் , நிருவாக உத்தியோகத்தர் எம்.ரி.எம்.சரீம், கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் ஏ.எல்.பைரூஸ், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.பி.எம்.ஹுசைன், திட்ட முகாமையாளர் யூ.எல்.ரஹ்மத்துல்லாஹ், சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான சு.வசந்தகுமார், ஏ.பி.எம்.இக்ராம், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.அப்துல் லத்தீப் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# தொலைக்காட்சிப் பெட்டி வீழ்ந்ததால் காயமடைந்த சிறுமி வைத்தியசாலையில்

மீராவோடை செய்தியாளர்

தொலைக்காட்சிப் பெட்டி சிறுமி மீது விழுந்ததால் காயமடைந்த அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியில் நேற்றுமுன்தினமிரவு (11) இடம்பெற்றுள்ளது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 5 வயது சிறுமி தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்பட்டிருந்த மேசையில் ஏறியபோது மேசையில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி சிறுமி மீது விழுந்துள்ளது. இச் சம்பவத்தில் காயமடைந்த சிறுமி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

# தோப்பூரில் கலந்துரையாடல்



தோப்பூர் செய்தியாளர்

மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் நடைபெறுகின்ற பிரதேச சாகித்திய விழா தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் தலைமையில் நேற்று (12) தோப்பூர் உப பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது 2023 ஆம் ஆண்டுக்கான பிரதேச சாகித்திய விழாவை தோப்பூர் பிரதேசத்தில் நவம்பர் மாதம் நடத்துவதெனவும் அதற்குரிய ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் எதிர்காலத்தில் அதற்குரிய குழுவை தெரிவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மூதூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களான எப்.எம். பசீர், திருமதி தாமரைமனாலன், லலிதாதேவி மற்றும் தோப்பூர் பிரதேச கலாசார பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 2ஆவது நாளாகவும் தொடரும் டெங்கு கள உத்தியோகத்தர்களின் போராட்டம்



திருக்கோவில் மேலதிக நிருபர்

நிரந்தர நியமனம் கோரி கல்முனைப் பிராந்திய சுகாதார பணிமனை டெங்கு கள உத்தியோகத்தர்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் முன்பாக இப்போராட்டம் இடம்பெற்றுவருகிறது.

2017 ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் 733 ரூபா நாளாந்த கெடுப்பனவுடன் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட நாம் இதுவரை நிரந்தர நியமனத்துக்குள் உள்ளீர்க்கப்படவில்லையென்றும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை டெங்கு களப் பணியாளர்களாக நியமனம் பெற்ற நாம் சுகாதாரப் பணிமனையினால் பணிக்கப்படும் ஏனைய பணிகளையும் செய்ய வேண்டியுள்ளதுடன் தமது வாகனங்களுக்கான எரிபொருளை சொந்த நிதியிலேயே நிரப்ப வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கடந்த 6 1/2 வருடங்களாக சேவையாற்றும் எங்களை நிரந்தரமாக்கும் வரை பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

# வவுணதீவு பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டம் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆராய்வு



கல்லடி செய்தியாளர்



மட்டக்களப்பு,வவுணதீவு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (11) மண்முனை மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அத்தோடு இப்பிரதேசத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல், மீன்பிடி உள்ளிட்ட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அத்தோடு பிரதேசத்தில் கால்நடைகளை விற்பனை செய்வதற்கென தனியானதொரு பொதுச் சந்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது இராஜாங்க அமைச்சர் தெளிவுபடுத்தியிருந்தார்.

இக்கூட்டத்தில் மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், உதவிப் பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மண்முனை மேற்கு பிரதேச சபையின் செயலாளர், வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்





நூருல் ஹுதா உமர்

அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேசிய காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா தலைமையில் நேற்றுமுன்தினம் (11) இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்ஸாரின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாநகர மற்றும் பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், சமூக அமைப்புகளின் பிரதானிகள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு காத்திரமான தீர்வுகளும் எட்டப்பட்டன.

அக்கரைப்பற்று கல்விக் கோட்ட பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை ஆராய்ந்து நிரந்தரமான தீர்வு ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வைக்க வேண்டும் எனத் தெரிவித்த குழுத் தலைவர், வெள்ள அனர்த்தங்களை தடுக்கும் வழிமுறைகளை இனங்காணல், ஆறுகள்,வடிகால்கள் முறையாக பராமரிக்கப்படுவதற்குத் தேவையான முன்மொழிவுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் முன்வைக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். அக்கரைப்பற்றில் அரச அலுவலகங்களுக்கான இடப்பற்றாக்குறை காணப்படுவதாக திணைக்களத் தலைவர்கள் இதன்போது குழுத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். விவசாயக் காணிகளிலிருந்து உச்சபயனை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்ந்த துடன் நெற்செய்கை தொடர்பாகவும் மேற்படி கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. விவசாய வீதிகளை புனரமைத்தல், நீர்ப்பாசன மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துதல், சுத்தமான குடிநீர் வழங்குதல் போன்ற மக்களின் அத்தியாவசிய தேவைகளை விஸ்தரிப்பு செய்வது தொடர்பாகவும் கலந்து கொண்ட திணைக்களத் தலைவர்களினால் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாலர் பாடசாலைக்கென பாரிய கட்டடத் தொகுதி நிர்மாணம்

## நிந்தவூர் பிரதேச சபையின் முயற்சி பாராட்டத்தக்கதென்கிறார் செந்தில்



நூருல் ஹுதா உமர்

நம்நாட்டில் பாலர் பாடசாலைகள் குடிசைகள் போன்ற அமைப்பிலேயே இன்னும் காணப்படுகின்றன. இந்நிலையில் பாலர் பாடசாலைக்கென பாரிய கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தாஹிர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து எடுத்த முயற்சி பாராட்டத்தக்கதாகும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் LDSP நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலையின் இரண்டாம் மாடி கட்டடத்தொகுதி திறப்பு விழா நேற்றுமுன்தினம் (11) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர் தலைமயிலான குழுவினர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

இதேவேளை இச்செயற்றிட்டத்தை முன்னின்று செயற்படுத்திய முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம். அஷரப் தாஹிர் நிந்தவூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், நம் நாட்டில் பாலர் பாடசாலைகள் குடிசைகள் போன்ற அமைப்பிலேயே இன்னும் காணப்படுகின்றன. இந்நிலையில் பாலர் பாடசாலைக்கென பாரிய கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தாஹிர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து எடுத்த முயற்சி பாராட்டத்தக்கதாகும்

எதிர்கால குழந்தைகளின் கல்விக்காக பெருந்தொகை நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்திய நிந்தவூர் பிரதேச சபைக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் இந்த பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள் திறமையான கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டேன். அதற்காக அவர்களுக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இதன்போது பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் கிழக்கு மாகாண முதலமைச்சின் பதில் செயலாளருமான என். மணிவண்ணண், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவர்த்தன, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ. கமல் நெத்மினி, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எல். அப்துல் லதீப், பிரதம பொறியியலாளர் ஏ.எம். ஷாஹிர், கல்முனை மாநகர சபை ஆணையாளர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர், திருக்கோவில் பிரதேச சபை செயலாளர், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் வை.எல். சுலைமா லெப்பை, நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஏ. அஷ்பர், கே.எல் றபீக், பஸபிஹா, பஷீரா உம்மா, சுதாமதி, றிஹானா பாயிஸ், நிந்தவூர் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்வு






ஏறாவூர் நிருபர்

ஏறாவூர் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் சுற்றாடல் அமைச்சர் இஸட்.ஏ. நஸீட் அஹமட் தலைமையில் நேற்றுமுன்தினம் (11) மாலை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூதின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கூட்டத்தின் போது கடந்த காலத்தில் கடைசியாக இடம் பெற்ற குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக் கமைவாக மேற்கொள்ளப்பட்ட மக்கள் நலத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கல்வி, சுகாதாரம் , மீன்பிடி மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து கடந்தகால கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் எட்டப்பட்டன.

மேலும் பொதுமக்களின் குடியிருப்புப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகளினால் ஏற்படும் சிரமங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந் தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்கப்பட்டி ருந்தது. அதற்கிணங்க அரிசி ஆலைகளை புன்னக் குடா கடற்கரையை அண்மித்துள்ள அரச காணிகளுக்கு இடமாற்றும் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நிலவும் பௌதீக மற்றும் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு விசேட குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயத் துறை ஊடாக நகர தோட்டங்களை அமைப்பதற்கான உதவிகளை வழங்குவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

விசேடமாக ஏறாவூர்ப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்குப் பொருத்தமான திட்டங்கள் அமுல்செய்யப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுக்கூட்டத்தில் துறைசார் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# ஆலையடிவேம்பு பிரதேச வீடொன்றில் கொள்ளை; பொலிஸில் முறைப்பாடு

திருக்கோவில் மேலதிக நிருபர்



ஆலையடிவேம்பு, பனங்காடு வைத்தியசாலை வீதியிலுள்ள வீடொன்றில் கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர் .

கணவர் வயல் வேலை காரணமாக நேற்றுமுன்தினம் (11) மாலை வெளியில் சென்றுள்ளார். இதனையடுத்து மனைவி குழந்தைகளுடன் வீட்டில் உள்ள அனைத்து மின் குமிழ்களையும் அணைத்து விட்டு வீட்டின் முன்பாகவுள்ள மின் குமிழை மாத்திரம் ஔிரச் செய்து வீட்டை பூட்டி விட்டு தனது தாயின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் மறுநாள் அதிகாலை அதாவது நேற்று (12) அதிகாலை 5.30 மணியளவில் வீட்டுக்கு வந்தபோது வெளியில் ஔிரப்பட்டிருந்த மின் குமிழ் அணைக்கப்பட்ட நிலையில் வீட்டினுள் அணைக்கப்பட்டிருந்த மின்குமிழ்கள் ஔிர்ந்து கொண்டிருந்தன.

இதன்போது உள்ளே சென்ற வேளை வீட்டினுள் இருந்த தொலைக்காட்சி, தங்கநகைகள் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளர் இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார்.குறித்த சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



சமுதாய சீர்திருத்த திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலய மாணவர்களுக்கான போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்பூட்டும் செயலமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திணைக்கள உத்தியோகத்தர் ஏ.எம்.நிஸார் ,அதிபர் பஸ்மில் ஆகியோர் விளக்கமளித்தனர்.

**படங்கள்:** *கோணாவத்தை செய்தியாளர்*

## போடியார் புலம்பல்!



**ஜனாதிபதி ரணில் அம்மாச்சிட கழுகுப்பார்வைக்குள மட்டக்களப்பு ஆளும் தரப்பு உறுப்பினர்கள் உள்ளதாம் எண்டு ஒரு செய்திய பாத்தன்.!**

**அவருக்கு கழுகுப்பார்வ இருக்கோ இல்லையோ தெரியாது. ஆனா மெய்யா, மெய்யா குள்ளநரிப்பார்வ இருக்கிறது எண்ட விசயம் நமக்கு தெரியும். மட்டக்களப்பான வச்சித்தான் 2004ல் பெரிய குழிவெட்டி போராட்டத்த அழிச்சவரு இப்ப எந்த மட்டக்களப்பான வச்சி ஆருக்கு குழிபறிக்கப்போறாரு எண்டத பாப்பம். அந்த மனிசன் அடிக்கடி மட்டக்களப்புக்கு வாறாரு எண்டா ஏதோ ஒண்டு இருக்கிறது மட்டும் மெய் எலுவா?**

# மட்டக்களப்பில் புனரமைக்கப்பட்ட வீதிகள் ஆளுநரால் திறந்துவைப்பு



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் உலக வங்கியின் நிதி உதவியுடன் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்ட கொக்குவில், சத்துரு கொண்டான் மற்றும் தன்னாமுனை ஆகிய வீதிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மக்கள் பாவனைக்காக நேற்று (12) புதன்கிழமை திறந்து வைத்தார்.

TCAMP-PRDP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 72 மில்லியன் ரூபா செலவில் குறித்த வீதிகள் புனரமைக்கப்பட்டன .கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், விசேட அதிதியாக வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ,தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.





கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அதிபர் க.செல்வராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பல் வித முறைப்பாட்டு பிரிவு பொலிஸ் அதிகாரி அபயவிக்ரம, பொறியியலாளர் பாஸ்கரதாஸ், ஓய்வுநிலை ஆசிரியை நல்லம்மா சதாசிவம்,பிரதி அதிபர்களான சண்முகநாதன், உமாபதி சிவம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**படங்கள்:** *பாண்டிருப்பு நிருபர்*





அம்பாறை மாவட்ட புதிய அரசாங்க அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள சிந்தக்க அபேவிக்ரம நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நிந்தவூர் பிரதேசத்துக்கு விஜயம் செய்தார். நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம்.அப்துல் லத்தீபின் வேண்டுகோளுக்கிணங்க இங்கு விஜயம் செய்த அரசாங்க அதிபர் இப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு தொடர்பாக உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார்.

**படங்கள்:** *மாவடிப்பள்ளி செய்தியாளர்*

# உயர்தர மாணவர்களுக்கு சிப்தொர புலமைப் பரிசில்





நூருல் ஹுதா உமர்



சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 2022/2024 ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான சிப்தொர புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீமின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (11) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.சப்ராஸ், சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவாஃபிகா, கணக்காளர் ஏ.ஜே. நுஸ்ரத் பானு, நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், திட்டமிடல் பிரிவு பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.றியாஸ், சமுர்த்தி சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் எல்.ஜி.எம்.ஜே.மரியம், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர் .

இதன் போது சாய்ந்தமருது பிரதேச தனவந்தர் ஒருவரினால் 68 மாணவர்களுக்கும் அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திரெட்ஸ் புதிய சாதனை

## ஆரம்பித்த 5 நாட்களில் 10 கோடி பேர் இணைவு



திரெட்ஸ் செயலி தொடங்கப்பட்ட 5 நாட்களில் 10 கோடி பேர் அதில் இணைந்துள்ளனர்.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வட்ஸ்அப் ஆகியவற்றின் தாய் நிறுவனமான மெட்டா, ட்விட்டருக்குப் போட்டியாக 'திரெட்ஸ்' என்ற செயலியை கடந்த ஜூலை 6ஆம் திகதி அறிமுகப்படுத்தியது. அறிமுகமான இரண்டு நாட்களில் 7 கோடி பேர் அதில் இணைந்தனர்.

இந்நிலையில், திரெட்ஸ் செயலி ஆரம்பிக்கப்பட்ட 5 நாட்களில் 10 கோடி பேர் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலமாக பிற சமூக வலைத்தளங்களை திரெட்ஸ் முந்தியுள்ளது.

சாட்ஜிபிடி(ChatGPT) அறிமுகமாகி 10 கோடி பயனர்களைப் பெற சுமார் இரண்டு மாதங்கள் ஆனது. மக்களிடையே மிகவும் பிரபலமாக இருந்த டிக்டொக் இவ்வளவு பயனர்களைப் பெற 9 மாதங்கள் ஆகியது. அதுபோல 2010இல் இன்ஸ்டாகிராம் அறிமுகமானபோது 10 கோடி பாலோவர்ஸ் வருவதற்கு இரண்டரை ஆண்டுகள் ஆகியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், திரெட்ஸ் 100 நாடுகளில் மட்டுமே அதுவும் அப்பிள், கூகுள் பிளே ஸ்டோரில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் 5 நாட்களில் 10 கோடி பேர் அதில் கணக்கு தொடங்கியுள்ளமை முக்கிய சாதனையாகப் பார்க்கப்படுகிறது. ட்விட்டரில் 2022 மே கணக்கின்படி, ஒரு மாதத்தில் 22.9 கோடி பேர் ட்விட்டரைப் பயன்படுத்துகின்றனர்.

ஏற்கனவே 100 கோடி பயனர்களைக் கொண்ட இன்ஸ்டாகிராம் மூலமாக திரெட்ஸ் கணக்கு எளிதாகத் தொடங்கலாம் என்பதால் திரெட்ஸ் வெகு விரைவாக மக்களிடையே பிரபலமாகியுள்ளது எனப்படுகிறது.

உலக செய்திகள்

# இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்காக இலங்கையில் தமிழீழம் அமையவேண்டும்

## திருப்பூர் சர்வதேச மாநாட்டில் வலியுறுத்து







''இந்தியாவின் தேசிய பாதுகாப்புகாக தமிழீழம் அமைய வேண்டும்'' என திருப்பூரில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்து சமுத்திர பாதுகாப்பில் ஈழத் தமிழர்களின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட வரலாறு பற்றியும், தமிழீழம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் திருப்பூரில் சர்வதேச மாநாடொன்று நடைபெற்றது.

ஸ்ரீலட்சுமி நாராயண பீடம் கல்கி மகான் ஸ்ரீ மகாலட்சுமி சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நான்காவது சர்வதேச மாநாட்டில், ஆன்மீக பெரியவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரையாற்றிய பலர், இந்தியாவின் தேசிய பாதுகாப்புகாக தமிழீழம் அமைய வேண்டும் என்றும், இந்தியா தனது இன்றுள்ள வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டுமென்றும் இந்தியாவின் தென்பகுதியிலுள்ள இலங்கையில் இந்திய எதிரி நாடுகளின் ஆக்கிரமிப்பு பற்றியும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் சீனா தற்போது பாக்குநீரிணையை ஒட்டிய தமிழர் தாயகத்தில் கடல் தளத்தை அமைத்து இந்தியாவிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி வருகிறது, இலங்கைத்தீவில் தமிழீழம் அமைந்தால் மட்டுமே சீனாவின் இந்தியா மீதான அச்சுறுத்தல் அகற்றமுடியும் என்பதை வலியுறுத்தி இந்த மாநாட்டில் பலராலும் பேசப்பட்டது.

இலங்கையில் சீனா 99 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்துள்ள ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகேயுள்ள இலங்கையின் தென்முனையான தொன்ட்ரா விரிகுடா கடற்பகுதியில் சீனா தனது அறிவியல் மற்றும் விண்வெளி தகவல் ஆராய்ச்சி மையம் ஒன்றை உருவாக்கி ரேடார் தளம் ஒன்றையும் அமைத்துள்ளது.

இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல் படைகளின் ரோந்துக் கப்பல்கள், படகுகளின் இயக்கத்தை மேற்படி சீன ரேடார் தளத்தால் துல்லியமாகக் கண்காணிக்க முடியும் என்றும் இதனால் இந்தியாவின் தென்மாநிலங்களிலுள்ள அணுமின் உற்பத்தி, இராணுவப் பாதுகாப்பு தொழில்நுட்ப ஆராய்ச்சி, கடல், ரேடார் கண்காணிப்பு நிலையங்கள் என்பவை பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை ஏற்படுமென்றும் இதனால் இலங்கையில் தமிழீழம் அமைத்து இந்திய தேசியப் பாதுகாப்பை இந்தியா உறுதிசெய்வதுடன் ஈழத் தமிழர்களுக்காக எப்போதும் துணைநிற்க வேண்டுமெனவும் வலியுறுத்திப் பேசினர்.

மேலும் இலங்கையில் தற்போது மத மாற்றம் என்ற போர்வையில் தமிழர் பண்பாடு அழிவைச் சந்தித்து வருகின்றது, அதனைத் தடுப்பதற்காக தமிழகம் தன்னாலான அனைத்து உதவிகளையும் ஈழத்தமிழருக்கு வழங்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

# வாட்டும் வெப்பம்: ஒரே ஆண்டில் 61,000 பேர் பலி

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 35 நாடுகளில் வெப்பம் காரணமாக கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 61ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். என ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து, ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு ஒருமுறையாவது செல்ல வேண்டும் என்பது பலரின் கனவு. காரணம், அங்குள்ள குளிர். அந்நாடுகளில் குளிர் அலைக்கு மக்கள் உயிரிழந்ததாக கேள்விப்பட்டிருப்போம். ஆனால், வெப்பத்துக்கு கடந்தாண்டு மட்டும் 61,000 பேர் உயிரிழந்துள்ளதாக ஆய்வொன்றில் அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 35 நாடுகளில், கடந்தாண்டு கோடை காலமான மே 30 முதல் செப்டெம்பர் 4 வரை வெப்பத்துக்கு பலியானோரின் எண்ணிக்கை குறித்து பார்சிலோனா குளோபல் ஹெல்த் இன்ஸ்டிட்யூட் ஆய்வொன்றை நடத்தியது.



இந்த ஆய்வில், குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும் 61ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. அதிகபட்சமாக ஜூலை 18 முதல் 24 வரையில் மட்டும் 11,637 பேர் உயிரிழந்துள்ளனர்.

பெரும்பாலானோர் இத்தாலி, கிரீஸ், ஸ்பெயின் மற்றும் போர்த்க்கல் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 80 வயதைக் கடந்த பெண்கள். இளம் வயதினரைப் பொறுத்தவரை ஆண்களே அதிகளவில் உயிரிழந்துள்ளனர்.

வெப்பத்தின் தாக்கத்தைத் தாங்க முடியாமல் இருதயம் மற்றும் நுரையீரல் தொடர்பான கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டு பலர் உயிரிழந்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளில் வெப்பத்தை சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். முதியவர்கள் இருக்கும் வீடுகளுக்கு மருத்துவக் குழுவினர் சென்று பரிசோதிப்பது, பொது இடங்களில் குளிரூட்டப்பட்ட அறைகள் அமைப்பது, பொது இடங்களில் குளிர்பானம் அளிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

காலநிலை மாற்றம் தொடரும் பட்சத்தில், இனிவரும் கோடை காலங்கள் ஐரோப்பா மட்டுமின்றி, அனைத்து நாடுகளுக்கும் சவாலானதாகவே அமையும்.



# வெள்ளத்தில் மூழ்கிய இந்திய வடமாநிலங்கள் 91 பேர் உயிரிழப்பு

இந்திய வடமாநிலங்களில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி 91 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இமாச்சல பிரதேசத்தில் கடும் மழை மற்றும் வெள்ள பாதிப்பால் 48 மணிநேரத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தரகாண்டில் மழை வெள்ளத்தால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்ததுடன், ஆங்காங்கே மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இதில் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த 3 சுற்றுலாப் பயணிகள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

இதே போன்று யமுனை ஆற்றில் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஆக்ரா, பிரயாக்ராஜ் மற்றும் யமுனைக் கரையோர கிராமங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

# சமரியின் அதிரடியில் ஆறுதல் வெற்றியீட்டிய இலங்கை

நியூசிலாந்து மகளிர் அணியுடனான மூன்றாவதும், இறுதியுமான ரி20 ஆட்டத்தில் இலங்கை மகளிர் அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றியீட்டி தொடரில் ஆறுதல் வெற்றிபெற்றது.

முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. அடுத்து நடைபெற்ற ரி20 தொடரில் முதல் இரு போட்டிகளிலும் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற 3ஆவது ரி20 ஆட்டத்தில் முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 140 ஓட்டங்கள் எடுத்தது.

141 என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணியின் கெப்டன் சமரி



அத்தப்பத்து ருத்ர தாண்டவம் ஆடினார். சிக்ஸர், பவுண்டரிகளை விளாசிய அவர் 25 பந்துகளில் அரைசதம் அடித்தார். இதன் மூலம் ரி20இல் அதிவேகமாக அரைசதம் அடித்த இலங்கை வீராங்கனை என்ற சாதனையை சமரி அத்தப்பத்து படைத்தார்.

தொடர்ந்து அதிரடி காட்டிய அவர், ஆட்டமிழக்காமல் 47 பந்துகளில் 80 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் இலங்கை அணி 14.3 ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி இலக்கை அடைந்தது.

# ஈடன் கார்டன் மைதான ரிக்கெட் விலை விபரம் வெளியீடு

ரமணி

ஐ.சி.சி. ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி ஒக்டோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற இருக்கிறது. இந்நிலையில், போட்டி நடைபெறும் ஈடன் கார்டன் மைதான ரிக்கெட் விலை விபரம் வெளியாகி உள்ளது.

கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் ஸ்டேடியத்தில் 63,500 பார்வையாளர்கள் அமரும் வசதி உள்ளது. 5 போட்டிகள் அங்கு நடைபெறவுள்ளன. பெங்கால் கிரிக்கெட் சங்கம் வெளியிட்ட அறிக்கையில், அரையிறுதிப் போட்டிக்கான ரிக்கெட் விலை ரூ.900 (இந்திய விலை) முதல் தொடங்கும் என்று தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ், நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான போட்டிக்கான ரிக்கெட்களின் விலை குறைவாக இருக்கும். ரூ.650 (மேல் அடுக்கு) முதல் ரூ.1500 (பி, சி, கே, எல் பிளாக்) இருக்கும். மேலும், டி மற்றும் எச் பிளாக்கிற்கு ரூ.1,000 ரிக்கெட் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண அரையிறுதி மற்றும் இந்தியா- தென்னாபிரிக்கா போட்டிக்கான ரிக்கெட்டுகளின் விலை ரூ.900 முதல் ரூ.3,000 வரை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, பங்களாதேஷ் ஆகியவற்றுக்கு எதிராக பாகிஸ்தான் இரண்டு போட்டிகளில் விளையாட உள்ளது. இந்த இரண்டு போட்டிகளுக்கான ரிக்கெட்டுகள் ரூ.800 (மேல் அடுக்கு), ரூ.1200 (டி, எச் பிளாக்), ரூ.2000 (சி, கே பிளாக்) ,ரூ..2200 (பி, எல் பிளாக்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

Sri Lanka Cricket
தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

# தொடர்ச்சியாக ஆறாவது வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த அட்டாளைச்சேனை சோபர் வி.க. சம்பியன்

அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)



சினாத் ட்ரவல்ஸ் அனுசரணையில் நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு அதாஉல்லாஹ் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக் கழகமும், அட்டாளைச்சேனை சோபர் கழகமும் மோதியது.

இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற சோபர் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும், இரண்டாமிடம் பெற்ற ஹிக்மா அணிக்கு கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அட்டாளைச்சேனை சோபர் அணியினர் இதுவரையும் மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தொடர்ச்சியாக ஆறு வெற்றிக் கிண்ணங்களைத் தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் பசரிச்சேனை ப்ரீமியர் லீக் - 2023: ஆத்திமுனை வொரியஸ் சம்பியன்



அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

பொத்துவில் பசரிச்சேனை ப்ரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆத்திமுனை வொரியஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

பொத்துவில் பசரிச்சேனை ப்ரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் தலைவர் ஏ.எம்.சமீர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பசரிச்சேனை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் பசரிச்சேனை குடாக்கல்வி டயமன்ஸ் அணியை எதிர்கொண்ட ஆத்திமுனை வொரியஸ் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்துடன் 25 ஆயிரம் ரூபா பணப்பரிசை வென்றது.

இரண்டாமிடம் பெற்ற டயமன்ஸ் அணிக்கு கிண்ணத்துடன் 15 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது. பொத்துவில் பசரிச்சேனை ப்ரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 10 அணிகள் கலந்து கொண்டன.

பிரதம அதிதியான பொத்துவில் அல் - அக்சா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.மாபீரின் சேவையைப் பாராட்டி பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கேகாலை புனித மரியாள் வித்தியாலயத்தின் கிரிக்கெட் வீரர்கள் கௌரவிப்பு





இரத்தினபுரி நிருபர்

கேகாலை புனித மரியாள் வித்தியாலயத்தில் கல்வி கற்று கிரிக்கெட் விளையாட்டில் பங்குபற்றி வரும் பழைய மாணவர்களையும் மற்றும் மேற்படி பாடசாலையில் கல்வி கற்று ஓய்வு பெற்றுள்ள கிரிக்கெட் வீரர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கேகாலை புனித மரியாள் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வு கேகாலை புனித மரியாள் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்களான தேசிய கல்வி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, சினிமா நடிகர் பந்து சமரசிங்க, பாதுகாப்புப் படையின் முன்னாள் மேஜர் ஜெனரல் கெளும் நுகொகொட மற்றும் மேற்படி பாடசாலையின் அதிபர் காமினி கருனாருவான் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# கல்முனை அல் - மிஸ்பாஹ்வின் பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட், கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அங்குரார்ப்பணம்

எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனை அல் - மிஸ்பாஹ் மகா வித்தியாலய பழைய மாணவர்களை பாடசாலையோடு மீண்டும் ஒன்றிணைக்கும் முகமாக மாபெரும் கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான ஏ.ஹபீப் முஹம்மட் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி, எம்.எஸ்.எம்.சர்மில் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப அங்குரார்ப்பண நிகழ்வு அதிபர் அப்துல் ரசாக்கின் தலைமையிலும் பிரதி அதிபர் ஜின்னாவின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்றது. சுற்றுத்தொடரின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7